
www.padippakam.com

# புதிய சமதர்மம்

2000




படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் மக்களுக்கும் கல்வி புறக்கணிப்பு!

## சிங்கள ஏழைகளுக்கும் கல்வியில் அநீதி

போர் நடவடிக்கையின் காரணமாக நூற்றுக்கணக்கான பாடசாலைகள் வடகிழக்கில் இயங்காது இருக்கின்றன. இதேவேளை வடக்கு கிழக்கிற்கு வெளியே இருந்த எத்தனையோ தமிழ் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. தற்போது இருக்கும் பாடசாலைகளையும் மூடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் பாடசாலைகளுக்குரிய வசதிகளை வழங்காது விடுவதால், காலப் போக்கில் இப் பாடசாலைகள் மூடப்படுகின்றன. வன்னி மாவட்டத்துக்கு மூன்று வருடங்களுக்கு முன்பு அனுப்பப்பட்ட கல்வி சம்பந்தமான உபகரணங்கள் இவ்வளவு காலமும் வவுனியாவில் தடுத்து வைத்திருந்து விட்டு, தற்போது கல்வி அமைச்சின் உத்தரவின் பேரில் வன்னிக்கு அனுப்பப்படுகிறது. திறமைக்குக் குழி பறிக்கப்பட்டது, 1976ல், அதாவது தரப்படுத்தல் முறைமைகள், அறிமுகப்படுத்தியதால், இந்நாட்டில் திறமை என்ற நிலைக்கு விடை கொடுக்கப்பட்டது. இதனால் பெருமளவில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மாணவர்களே.

இன்று தென் இலங்கையில் மிகப் பிரபல்யம் பெற்ற அனைத்து பாடசாலைகளிலும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் பாட நெறிகள் கற்பிக்கப்படுகிறது. வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில், யுத்தத்தை காரணம் காட்டி நவீன வசதிகள் யாவும் மறுக்கப்பட்டு உள்ளது. தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் நூல்களில் பல பிழைகள், இருப்பதாக தமிழ் ஆசிரிய சங்கம் பலமுறை குற்றம் சாட்டி வருகிறது. குறிப்பாக, தரம் 2, தரம் 7, தரம் 10 ஆகிய வகுப்புகளின் சகல பாட நூல்களிலும் இப்பிழைகள் இருப்பதாக தெரிய வருகிறது. இதையிட்டு அரசாங்கம் அதிக சிரத்தை எடுத்ததாக தெரியவில்லை.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள அனேக தமிழ் பாடசாலைகளுக்கு ஆங்கில பாடநூல் இன்றுவரை வழங்கப்படவில்லை என தெரிய வருகிறது.

வடக்கு கிழக்கில் 15,000 மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவ, தென்பகுதியில் 10,000 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மேலதிகமாக இருப்பதாகவும் தெரிய வருகிறது. கிழக்கு மாகாணத்தில் மட்டும் 4000 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக அறிகிறோம்.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேசத்தில் மாத்திரம் 700 மேற்பட்ட ஆசிரிய வெற்றிடம் உள்ளது.

கடந்த 20 வருடகாலமாக தமிழ் மாணவர்கள் குப்பிவிளக்கு வெளிச்சத்திலும், குண்டு வீச்சுக்கு மத்தியிலுமே கற்கின்றனர். இதை இல்லாமல் செய்யும் மனநிலையில் அரசாங்கம் இல்லை. மாறாக மேலும், நவீன யுத்த கருவிகளை வாங்கி தமிழ் மக்கள் மீது. வெறி பிடித்த யுத்தத்தை தொடரவே அரசு விரும்புகிறது. இன்று யாழ் பல்கலைக்கழகம் இயங்க முடியாத நிலையில் உள்ளது. முன்பும் பல தடவைகள் இயங்க முடியாமல் மூடப்பட்டு இருந்துள்ளது. இதேநேரம் பல்வேறு காரணங்களால் யாழ் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற மாணவர்கள் இடை நடுவில் கல்வி கற்பதை நிறுத்தியுள்ளனர்.

கடந்த 50 ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு வழிகளில் பல்வேறு முனைகளிலிருந்து தமிழ் மாணவர்களின் கல்விக்கு ஆப்பு வைக்கும் கைங்கரியத்தில் தென் இலங்கை பேரினவாத அரசுகள் முயன்றன. முயன்று கொண்டும் இருக்கின்றன. பொதுவாகவே வறுமையின் காரணத்தினால் இந்த நாட்டில் ஏராளமான மாணவர்கள் கல்வி கற்பதை நிறுத்தி உள்ளனர். 5 வயது தொடக்கம் 14 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் கட்டாயம் பாடசாலைக்குச் செல்ல வேண்டும். ஆனால் இந்த நாட்டில் வறுமையின் கோரத்தினால் மேற்படி வயது அமைப்பில் உள்ள 431,668 மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாது இருக்கின்றனர். இவர்களில் 85,906 பிள்ளைகள் வீட்டு வருமான வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். 18,589 பிள்ளைகள், வீட்டு சேவைக்கு அமர்த்தப்பட்டு இருக்கின்றனர். 53,330 பிள்ளைகள், நிதி நெருக்கடி காரணமாக பாடசாலைக்கு செல்லாது விட்டுள்ளனர்.

போதிய மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தராதமையால் 172 பாடசாலைகள் தென் இலங்கையில் மூடப்பட்டு உள்ளது. தற்போது அரசாங்கம் உலக வங்கியின் திட்டத்தின் படியே கல்விச் சீர்திருத்த நடலடிக்கைகளில் ஈடுபடுகிறது. இதன் ஒரு அங்கமாகவே பாடசாலைகளை மூடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வருமானத்தில் உயர்ந்த தரத்தில் இருப்போர், பிரபல்யமான பாடசாலைகளில் கல்வி பயில்கின்றனர். இதனால் அரசாங்கம், பெரிய பாடசாலைகளுக்கே அனேக வசதிகளைச் செய்து கொடுக்கிறது. இதனால் சிறிய பாடசாலைகளில் அதுவும் பின் தங்கிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் உள்ள ஏழை மாணவர்கள் கூட பிரபல்யமான பாடசாலைகளுக்கே செல்கின்றனர். இதனால் கிராமிய பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை குறைவடைகிறது. இதனைக் காரணமாக வைத்து அரசாங்கம் பாடசாலைகளை மூடி விடுகிறது. இந்த நாட்டில் பாடசாலைக்கு செல்வதற்கு ஆடை இல்லாமல், பாடசாலை உபகரணம் வாங்குவதற்கு பணம் இல்லாமல், எத்தனையோ மாணவர்கள் உள்ளனர். இந்த நிலை அரசுக்கு தெரிந்தாலும், அரசாங்கம் தெரியாதது போலவே இருக்கிறது. உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் அறிவுறுத்தலால், ஆபிரிக்க கண்டமே பற்றி எரிகிறது. ஏழையை மேலும் ஏழை ஆக்கவும், வசதி படைத்தோரை மேலும் வசதியுள்ளோராக மாற்றுவதுமே உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் குறியாக இருக்கிறது. வளர்முக நாடுகளில் ஏழைகளாக இருக்கும் மக்களை மனிதத் தூசுகளாகவே செல்வந்தர் உள்ளாக்குகின்றனர். இத்தகைய நடவடிக்கைகள் மேலும் நீடித்தால் மனிதத்தூசுகளாக மாறுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கவே செய்யும். இலங்கையில் போர் இத்தகைய நடவடிக்கைகளுக்கு பேருதவியாக இருக்கிறது.



## மகளிர் கருத்துமேடை

# நாகரீகம் என்ற போர்வையில்

பெண்கள் தமது விடுதலைக்காக போராடிக் கொண்டு இருக்கும் இக்காலப் பகுதியில் சில பெண்கள் தமது ஆடைகளுக்கு விடுதலையளித்து வருகிறார்கள் நாகரிகம் என்ற போர்வையில் இது மிகவும் வருந்தத்தக்க விடயமே ஆகும் ஆடையானது எமது மானத்தை காக்கவும் எமது காலநிலைக்கு ஏற்பவும் நாம் செய்யும் தொழிலுக்கு பொருந்துவனவாயும் இருக்க வேண்டும்.

இப்போது பெரும்பாலான பெண்கள் படங்களை பார்த்தும், மேல்நாட்டு மோகத்தின் காரணமாகவும், சிறிய விளவுசும், உடலின் அங்க அமைப்புக்களை வெளிப்படுத்தக் கூடியவாறு உடலோடு ஒட்டிய முறையில் தைக்கப்பட்ட உடைகள் என்பவற்றை அணிகின்றனர். இதனால் இவர்களும் பலவகை கஸ்டங்களை எதிர்நோக்குகின்றனர். உதாரணமாக, பஸ்வண்டியின் படியில் கால்வைத்து ஏறவே இவர்கள் சிரமப்படுவதுண்டு. மேலும் இவர்களுடைய உடையலங்காரத்தில் வெளிப்படும் அங்கங்க அசைவுகளைப் பெண்களே வளர்க்க தோன்றும் போது ஆண்கள் எம்மாத்திரம். இதன் மூலமே பெரும்பாலான ஆண்கள் பெண்கள் மீது சேஸ்ட்டைகள் விடுவதுண்டு. அதனால் இந்த ஆடைக்குறைப்பு அவசியமற்ற ஒன்றாகவே காணப்படுகின்றது. நாகரிகமான முறையில் ஆடையணிவது நன்று. ஆனால் பெண்மையை இழிவுபடுத்தக்கூடிய ஆடைகளை தவிர்ப்பது சிறந்தது ஆகும். வெளிநாட்டவர் பலர் எமது கலாச்சார ஆடைகளை விரும்பியணியத் தொடங்கியிருக்கிறார்கள் தற்போது. ஆனால் எம்மவர் சிலர் வெளிநாட்டு மேற்கத்திய உடைகளை குறைப்பது கவலைக்கிடமாக உள்ளது. இந்த நிலை என்று மாறுமோ ?

மனிதன் பலவழிகளிலும் முன்னேற்றமடைந்துள்ளான். எனினும் சில ஆண்கள் தமது மனநிலைகளை பெண்களின் விடயத்தில் பின்னோக்கியிருக்கிறார்கள். ஏனெனில் ஆண்கள் பெண்களின் சுதந்திரம், சமத்துவம் என்று பலவாறு பேசுவார்கள். பெண் சுதந்திரமாக செயற்பட வேண்டும். தனது கருத்துக்களை துணிந்து முன்வைக்க வேண்டும். அதாவது மொத்தத்தில் பாரதி கண்ட புதுமைப்பெண்ணாக இருக்க வேண்டும் என்பார்கள். ஆனால் இவையெல்லாம் கதையளவில்தான். அதாவது அவர்கள் தனது மனைவியோ, தாயோ, சகோதரியோ, நண்பியோ ஓர் யதார்த்த பூர்வமான கருத்தை முன்வைத்தாலே ஏற்க முன்வரமாட்டார்கள். இவர்கள் வெளியில் பெண்சுதந்திரம் பேசுவார்கள். ஆனால் வீட்டில் பெண்கள் ஏதாவது சொல்ல முயன்றாலே "பெண்மூப்பு" என்பார்கள். இது பல ஆண்களால் இன்றும் சொல்லப்படும் ஒரு சொல்லாகவே காணப்படுகிறது.

பெண்கள் வெறும் பொம்மைகள் அல்ல என்தையும் இவர்கள் உணர வேண்டும். பெண்களும் மனித உணர்ச்சிகளுக்கு உட்பட்டவர்கள் தான் என்பதை உணர வேண்டும். வேலை செய்யும் பெண்கள் அதிகளவில் மேலதிகாரிகளின் தொல்லைகளுக்குட்படுகிறார்கள். தெருவில், பஸ்ஸில் இப்படி பல இடங்களிலும் பெண்கள் பல சிக்கல்களை எதிர்நோக்குகிறார்கள். இதற்கு காரணம் ஆண்களின் மனவிகார வெளிப்பாடேயாகும். சிலரது பகிடிகள், கதைகள், தொலைபேசி உரையாடல்கள் கூட மனவிகாரங்களையே வெளிப்படுத்துகின்றன. இவர்களைத் திருத்த முயன்றால் பெண்ணொருத்தி அவளை புறக்கணித்து சமுதாயத்தில் இருந்து அவள் ஒரு மாதிரி என்பார்கள். எனவே ஆண்கள் எவ்வளவு தாமே தம்மனநிலையை மாற்றி பெண்களும் எங்களைப் போன்ற ஜீவன்மார்களே என எண்ண வேண்டும். அவர்கள் நிலையில் மாற்றம் வந்தால் பெண்களுக்கு கிடைத்த பெரிய வெற்றியாகும்.

உமாதேவி
தெஹிவளை

## சிங்கள நாளிதழ்கள் வெளியிட மறுக்கும் செய்திகள்

கொழும்புத் துறைமுகத்தின் வரைபடங்களை வைத்திருந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூன்று துறைமுக அதிகார சபை அதிகாரிகளான ஏ. சி. இராசையா, வசந்தி சிவசிதம்பரம், சீ. டீ. சின்னக்கோன் வாக்கு மூலங்கள் சட்ட மா அதிபரின் கவனத்துக்கு எடுக்கப்பட்டபோது அவர்கள் மீது வழக்குத் தொடரப் போதிய ஆதாரங்கள் கிடையாது எனச் சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்ததையடுத்து மூவரும் விடுதலை செய்யப்பட்டனர். இது இந்த வாரத் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியாகும்.

மேற்படி அதிகாரிகள் கடந்த சில தினங்களுக்கு முன்பு கைது செய்யப்பட்ட போது சிங்கள நாளிதழ்கள் தமது முதற்பக்கச் செய்தியாகக் 'கொழும்புத் . துறைமுகத்தின் வரைபடங்களை வைத்திருந்த புலிகள்' எனத் தலைப்பிட்டு வெளியிட்டிருந்தன. ஆனால் இவர்கள் குற்றமற்ற நிரபராதிகள் என நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டது தொடர்பான செய்தியை சிங்கள நாளிதழ்கள் எதுவுமே அந்தச் செய்தியை வெளியிட்ட நாளிதழ்கள் உட்பட வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எஸ் எஸ்.

படிப்பகம்

www.padippakam.com



# அமைச்சர் அஷ்ரப்புக்கு சோதனைக்காலம்

முஸ்லிம் மக்களுக்கு தென்கிழக்கு அலகு வழங்கப்படா விட்டால் பதவி துறப்பேன் என்ற ரீதியில் செயற்பட்டு வந்த அமைச்சர் அஷ்ரப் இன்று மௌனமாக இருப்பதன் மர்மம் என்ன?

பெரும் எதிர்பார்ப்புடன் தேசிய ஐக்கியத்துக்காக கட்டியெழுப்பப்பட்ட தேசிய ஐக்கிய முன்னணி செயலற்ற நிலையில் உள்ளது. செத்தே போயிற்று என்றும் கூறலாம். மேற்படி அமைப்பை கட்டியெழுப்புவதற்கு நாள் ஒன்றுக்கு 3 1/2 லட்சம் ரூபா வீதம் லிஎம்பரத்-துக்காக செலவு செய்யப்பட்டதாகவும் தெரிகிறது. இப்பணம் புனர்வாழ்வு அமைச்சில் இருந்தே பெறப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில் இஸ்ரேல் வருகைக்கு எதிராக மிகக் கடுமையான போராட்டம் நடத்தினார் அமைச்சர் அஷ்ரப். இன்று இஸ்ரேல் பற்றி ஒரு வார்த்தை கூட வெளிவிடாமல் இருப்பது வியப்பாக இருக்கிறது.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து 45 கொள்கலன்கள் வெளியேற்றப்பட்ட மர்மத்தின் பின் அமைச்சர் அஷ்ரப்-புக்கும், அரச உயர்மட்டத்துக்கும் இடையே கசப்பான வெளிப்பாடுகள் எழுந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பாக சந்திரிக்கா உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இதேவேளை எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பராளுமன்ற உறுப்பினர் இலியாஸ் போன்றோர், முஸ்லிம் காங்கிரசில் இருந்து ஒதுங்கிய நிலையில் உள்ளனர். தற்போது முஸ்லிம் காங்கிரசுக்குள் பெருமளவு உட்கட்சி பூசல்கள் நடைபெறுவதாக அறியப்படுகின்றது.

முஸ்லிம் மக்களுக்கு எதிராகவோ அல்லது முஸ்லிம் காங்கிரசுக்கு எதிராகவோ அரசு செயற்பட்ட காலங்களில் சிங்கம் போல் கர்ச்சித்த அமைச்சர் அஷ்ரப் இன்று எதுவித கருத்தும் தெரிவிக்காமல் இருப்பது பலர் மத்தியில் சந்தேகங்களை கிளப்பியுள்ளது.

ஆட்சியாளர்களின் பொருளாதாரக் கொள்கையில் முஸ்லிம் மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டு உள்ளனர். வீரவிதான போன்ற இனவாத அமைப்புக்களின் அச்சுறுத்தல்களும், இன்று முஸ்லிம் மக்களுக்கு எதிராக கிளம்பியுள்ளது. சிறு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த முஸ்லிம் வியாபாரிகள் பல்வேறு நெருக்குதல்களுக்கு ஆளாகி இருக்கின்றனர். வடக்கு, கிழக்கில் நடைபெறும் யுத்தத்தாலும் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இந்நிலையில் முஸ்லிம் மக்களுக்குரிய பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்காக மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலமே முஸ்லிம் மக்களுக்கு உரிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும். முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை மையமாக வைத்து, தாம் சொகுசான நிலையை அடையவே சம்பந்தப்பட்ட தலைவர்களின் இலக்காக உள்ளது.

மலையக மக்களின் பிரச்சினையை மையமாக வைத்து இன்று மலையகத் தலைவர்கள் சுகபோகம் அனுபவிக்கிறார்கள். ஆனால் மலையக மக்களின் பிரச்சினை அப்படியே தான் இருக்கிறது.

பொதுஜன முன்னணியுடன் உரையாடிக் கொண்டிருக்கும் அனைத்துக் கட்சிகளும் தம்மை மறந்த நிலையிலேயே தான் உள்ளன. அதில் வலதும் உண்டு, இடதும் உண்டு. அமைச்சர் அஷ்ரப் இந்த சோதனைகளில் இருந்து தப்பிப் பிழைப்பாரா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# அரசியல் தீர்வுக்கு ஆதரவு வழங்கினால் தேசத்துரோகிகள்

## மாதுலுவாவே சோபித்த தேரர்

மகா சங்கத்தையும் சிங்கள மக்களையும் மறந்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள உத்தேச புதிய அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஒத்துழைப்பு வழங்கித் தேசத் துரோகிகளாகாது இருக்கும்படி சிங்கள மக்களின் வாக்குகளின் மூலம் தெரிவு செய்யப்பட்ட அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் கோருவதாக தேசிய சங்க சபையின் தலைவரான கோட்டே ஸ்ரீ நாஹா விஹாரையின் அதிபதியான மாதுலுவாவே சோபித்த தேரர் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், இந்த நாட்டில் பிராந்திய அரசாங்கங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் வடபகுதி தமிழ் மக்களிடமும், கிழக்குப் பகுதி முஸ்லிம் மக்களிடமும், மலைநாடு தொண்டமான் கோஷ்டியினரிடமும் சென்றுவிடும். உத்தேச புதிய அரசியலமைப்புச் சட்டத்தினால் ஏற்படப்போகும் பேரழிவு தொடர்பாக ஊரூராகச் சென்று மக்களை அறிவூட்டுவது பொருத்தமானதாம்.

நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கும் தீர்மானகரமான விடயமான புதிய அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்ற முன்பாக இந்த நாட்டின் மகா சங்கத்தினர் உட்பட 74 சதவீதமான சிங்கள மக்களை மறப்பது தொடர்பாக அரசுக்கு எனது கவலையைத் தெரிவிக்கின்றேன்.

புதிய அரசியலமைப்புச் சட்டம் தொடர்பாக மகாநாயக்கர்கள் அல்லது சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளிடமோ கருத்துக்களை அறிந்து கொள்ள அரசு வேண்டுமென்றே மறந்துள்ளது.

இந்த நாட்டில் இதுவரை சட்டமாக்கப்பட்ட எல்லா அரசியலமைப்புச் சட்டங்களுமே மக்களுக்குத் தெரியாமல் நிறைவேற்றப்பட்டவை என்பதால் அந்த அரசியலமைப்புச் சட்டங்களுமே ஆட்சி பீடத்தில் அமர்ந்தவர்களின் நன்மைக்காகத் தயாரிக்கப்பட்டவையே ஆகும். கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அரசினால் பேரழிவான ஒன்று என மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இடைக்கால நிர்வாக சபை, இன்று நன்மை பயக்கும் ஒன்றானது எவ்வாறு? எனக் கேள்வி எழுப்பினார்.

உத்தேச புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் ஊடாகத் தமிழ் ஈழ விடுதலைப் புலி இயக்கத்தின் பிரதான கோரிக்கையான தாயகக் கோட்பாடு உறுதிப்படுத்தப்படும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த நாட்டில் எழுந்துள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை முன்வைப்பதற்காக அரசியலமைப்புச் சட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும் இந்த நாட்டில் பயங்கரவாதப் பிரச்சினையே நிலவுகிறது.




நோர்வே சமாதான முயற்சியை விரும்பாத இனவாத பௌத்த குரு நோர்வே நாட்டு தேசிய கொடியை எரிக்கும் காட்சி

# இடைக்கால நிர்வாகம் காலம் கடந்த ஞானமா? அல்லது சந்திரிகா அரசு காட்டும் கானல் நீரா?

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு 5 வருடங்களுக்கு இடைக்கால நிர்வாகம் வழங்குவதற்கு சந்திரிகா அரசு தயாராகிறது. இதை ஐக்கிய தேசிய கட்சியும் வரவேற்றுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஆளும் பொதுஜன முன்னணியின் அங்கத்துவ கட்சிகளின் ஆசீர்வாதமும் உண்டென கூறப்படுகிறது. தமிழ்மக்களுக்கு பிரச்சினைகள் உண்டு அதனால்தான் அவர்கள் மிகக் கடுமையாக போராடுகின்றார்கள் என்பதை அரசாங்கம் ஏற்றுள்ளதா? 1994ல் வடபகுதிக்கு சமாதான தூதை அனுப்பிய சந்திரிகா அரசு, அவர்களிடம் இடைக்கால நிர்வாகம் பற்றிய செய்தியை எடுத்துச் சென்றிருந்தால், இன்று இவ்வளவு தூரம் தமிழ்மக்கள் இழப்புக்களை சந்தித்திருப்பதை தவிர்த்திருக்க முடியும். இன்று இலங்கை அரசுக்கு உலகநாடுகள் நெருக்குதல் கொடுக்கத் தொடங்கவே, தீர்வு பற்றி யோசிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அமையப்போகும் இடைக்கால நிர்வாகத்தில் தமிழ் ஈழவிடுதலைப் புலிகளுக்கு இடம் இல்லை என சந்திரிகா அரசு அறிவித்திருக்கிறது. மறுபக்கம் தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் இவ் அமைப்பில் இருக்க வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளிட்ட அனைத்து தமிழ் அமைப்புகளும், ஒருமித்த கருத்துடன் நிற்கின்றனர்.

இன்றும் கூட தமிழ் மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு காலம் கடந்துவிடவில்லை. உடனடியாக யுத்தம் நிறுத்தப்பட்டு போர் நடைபெறும் பகுதிகளில் இயல்பு நிலையை தோற்றுவித்து விட்டு, சம்பந்தப்பட்ட பகுதியினர் உலக சமுதாயம் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை முன்வைத்து பேச்சு வார்த்தையை ஆரம்பிக்கலாம். இது நாலாதிசையிலும் பிரிந்து வாழ்கின்ற தமிழ் சமுதாயத்துக்கு நம்பிக்கை கொடுக்கும் நடவடிக்கையாகும். ஆனால் அரசாங்கமோ கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டி நவீன ஆயுதங்களை பெற்று போரை முன் எடுப்பதில் தீவிரமாக உள்ளது. நாடு அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆழப்படுகிறது. செய்தி ஊடகங்கள் மீது மிகக் கடுமையான தணிக்கை விதிகள் பிரயோகிக்கப்படுகின்றன. மனித உரிமை மீறல்கள் எல்லையைத் தாண்டியுள்ளன. முப்படைகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களும் வகை, தொகை இன்றி காணப்படுகிறது.

அரசே முழு ஜனநாயக விரோத நிலையில் நின்று கொண்டு, மறுபக்கத்தில் தமிழ் மக்களுக்காக போராடிக் கொண்டிருக்கும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை விமர்சிக்கின்றது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை ஜனநாயக விரோத சக்திகள் என்றும் கூறுகிறது. இது காகம் குயிலைப் பார்த்து கறுப்பு என்று பரிகாசித்ததற்கு சமன்.

அரசுடன் இணைந்திருக்கும் இடதுசாரிகளும், வெளியே நிற்கும் மக்கள் விடுதலை முன்னணி, வாசுதேவ நாணயக்கார போன்றவர்களும், யுத்தம் சம்பந்தமான நடவடிக்கைகளில் அரசை ஆதரிக்கும் போக்கில் காணப்படுகின்றனர். தொழிற்சங்க உரிமைகளையும், செய்தி ஊடக உரிமைகளையும் பறித்துவிட்டு, தனியார் மயமாக்கலை துரித கெதியில் நடைமுறைப்படுத்துவதுடன் யுத்தத்திற்கான செலவையும், மக்கள் மீது சந்திரிகா அரசு சுமத்தியுள்ளது. இத்தகைய அரசின் போக்கிற்கு சார்பாக மேற்படி இடதுசாரி சக்திகள் செயற்படுவது வெட்கத் துக்குரியதாகும்.

இன்று யுத்தத்திற்கு எவ்வளவுதூரம் அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்கின்றதோ அவ்வளவு தூரம் இனவாதிகளின் செயற்பாட்டுக்கும் ஆதரவு கொடுக்கிறது. இனவாதிகளின் குரல் ஓங்கி ஒலிக்குமானால் இடைக்கால நிர்வாகம் என்ற நிலையும் கானல் நீராகலாம்.

படிப்பகம்

www.padippakam.com



# ஜஸ்வந்த் சிங்கின் வருகையும் இனப் பிரச்சினையின் தீர்வும்



இலங்கை அரசியலுக்குள் இந்தியத் தலையீடு என்பது விவாதத்துக்கு உரிய ஒன்றாகும். இந்திய அரசியல் வானில் இடதுசாரிகள் ஆதிக்கம் பெற்று விளங்கியபோது, அக்காலத்தில் இந்தியாவின் போக்கு ஒருவிதமாகவும், பின்பு இடதுசாரிகள் ஆதிக்கம் குறைந்தபோது வேறு விதமாகவும் இருந்து வருகிறது. இன்று ஆட்சியில் இருக்கும் பாரதீய ஜனதாக் கட்சி கூட்டணியினர், மிகவும் வலதுசாரி போக்கையுடையவர்கள். அமெரிக்க ஏகாதிபத்தியம் திருப்திப்படும் அளவுக்கு அவர்களின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. தென் மாநிலங்களில் வெற்றி பெறுவதற்கு பாரதீய ஜனதாவிற்கு திராவிட கட்சிகளே பின் பலமாக நின்று செயற்பட்டன. இதனால் இலங்கைத் தமிழர் விடயத்தில் பாரதீய் ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தால் தனிநாடு கிடைக்கும் என்ற தப்புக் கணக்குப் போட்டவர்களும் எம் மத்தியில் உள்ளனர். ஆனால் பாரதீய ஜனதாவின் மௌனம் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்ச உணர்வை இன்று தோற்றுவித்துள்ளது. 1987ல் இந்திய தலையீடு இருந்தபோது தென் இலங்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பிரிவினர் குறிப்பாக றணசிங்க பிரேமதாசா போன்றோர் இந்திய தலையீட்டை மிக வன்மையாக எதிர்த்தனர். இன்று நிலைமை வேறு விதமாக அமைந்திருக்கிறது. இந்திய அரசியல் தலையீட்டை விட, இராணுவத் தலையீட்டைத் தென் இலங்கை இன வாதிகள் பெரிதும் விரும்பி நிற்கின்றன. சம்பிகரணவகே, மாதுள சோபித தேரோ, டெல்லே குணவன்ச தேரோ நளின் சில்வா போன்றோரும் ஐக்கிய தேசியக் கட்சி, பொதுசன முன்னணி ஆகியவையும், இந்திய இராணுவ உதவியை பெரிதும் நம்பியிருக்கின்றன. இந்தியாவில் இந்திரா காங்கிரஸ், மூப்பனார் காங்கிரஸ் போன்றவற்றையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளும் இலங்கை அரசுக்கு சார்பாக குரல் கொடுக்கின்றன. ஜே. ஆர் ஜயவர்த்தனா, அமெரிக்க சார்பு போக்கைக் கொண்டிருந்ததாலேயே, மறைந்த இந்திய பிரதமர் இந்திராகாந்தி இலங்கைத் தமிழருக்கு சாதகமாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். அவரைத் தொடர்ந்து ரஜீவ்காந்தியும் தாயாரைவிட சற்று வேகமாக நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

பாரதீய ஜனதாவை இனவாதக் கட்சி என்று ஒதுக்கும் இந்திய இடதுசாரிக் கட்சிகள் பௌத்த பேரினவாதிகளைக் கொண்டிருக்கும் சந்திரிகா அரசை ஆதரிக்கின்றன. அதற்கு அவர்கள் கூறும் காரணம், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சந்திரிகாவை ஆதரிப்பதால் நாமும் ஆதரிக்கிறோம். இன்று இந்திய அரசியலில் இடதுசாரிக் கட்சிகள் பலமிழந்தவையாகவே உள்ளன. இந்திய கம்யூனிஜட் கட்சியின் தேசிய அந்தஸ்தை இழந்து நிற்கிறது. அதேவேளை மேற்கு வங்காளத்தில் கடந்த 20 வருடங்களில் முதன்முறையாக கம்யூனிஸ்ட் கட்சி பாராளுமன்ற ஆசனத்தை இழந்து நிற்கிறது. பாராளுமன்ற முறையிலும், கூட்டரசாங்க போக்கிலும் அதிக நம்பிக்கை கொண்ட இந்திய இடதுசாரிகள் இன்று மக்கள் மத்தியில் இருந்து தூக்கியெறியப்பட்டுள்ளனர். இன்று உண்மை நிலையை எடைபோடும் தகுதியை இந்திய இடதுசாரிக் கட்சிகள் இழந்து நிற்கின்றன. இந்த நிலையில் இலங்கைக்கு இந்தியா உதவி செய்ய வேண்டுமென்று வரிந்து கட்டி நிற்கிறது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எத்தகையதொரு தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்காது, தனது சொந்த நாட்டு மக்களை கொல்ல நினைக்கிற இலங்கை அரசுக்கு உதவி செய்ய முனைகின்றது. இலங்கை இன்று பௌத்த பேரினவாதிகளின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கிறது. 1958ல் பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்ட போது, 1989ல் இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டபோது, இருந்த அதே பௌத்த பேரினவாத ஆதிக்கமே இன்றும் உள்ளது. இந்த பௌத்த பேரினவாத ஆதிக்கத்துக்கு எதிராக, ஒரு அடி நகர முற்பட்டாலும் விளைவு பேராபத்தாக இருக்கும். 1994ல் சந்திரிக்கா பதவிக்கு வரும் போது நிலைமை வேறாக இருந்தது.. சிறுபான்மை தேசிய இனங்களின் ஆதரவு பெரியளவில் சந்திரிகாவுக்கு இருந்தது. இக்காலத்தில் ஒரு தீர்வை முன்வைத்திருந்தால் மக்கள் அதை அமுல்படுத்தி இருப்பார்கள். பேரினவாதிகளை எதிர்க்க கூடிய நிலையில், வெகு ஜனங்கள் திரண்டு நின்றனர். சந்திரிகா அந்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டுள்ளார். பின்பு சந்திரிகாவே யுத்தத்தை தொடர்ந்து நடத்தவும், பேரினவாத சக்திகளின் குரலுக்கு மதிப்பளிக்கவும் முன் வந்தார். இன்று நிலைமை மோசமாகியுள்ளது.

இலங்கைப் பிரச்சினை பற்றி பேசுகின்ற சர்வதேச சமுதாயம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கண்டனம் செய்தாலும் தமிழ் தேசிய இனம் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றே வலியுறுத்துகிறது. அமெரிக்க செயலாளர் பிக்கறிங், பிரித்தானிய பாராளுமன்றம், நோர்வே அரசு போன்ற அனைத்து பகுதியினரும் இதையே வலியுறுத்துகின்றனர். தமிழ் மக்களைத் திருப்தி செய்யக்கூடிய தீர்வுத் திட்டம் இலங்கை அரசிடம் உண்டா? அரசுடன் சேர்ந்து செயற்படும் தமிழ் கட்சிகளே, தீர்வுத் திட்டத்தில் ஒன்றுமே இல்லை என்கின்றார்கள். குறிப்பாக, தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களில் ஒருவரான ஆனந்தசங்கரி பின்வருமாறு கூறியுள்ளார். தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்ட பின்பு குரங்கு அப்பம் பங்கிட்ட கதை போல, அதில் இருந்த எத்தனையோ விடயங்கள் தற்போது இல்லாமல் போய் உள்ளது.

தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் உட்பட, ஏனைய தமிழ் அமைப்புகள் அனைத்தும் சந்திரிகாவின் தீர்வு யோசனையை நிராகரித்துள்ளனர். வடக்கு, கிழக்கு இணைப்பு இல்லாத எந்த தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்க மாட்டார்கள்.

1987ல் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் , இலங்கை இந்தியாவை ஏமாற்றியது. இக்காலத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினர் இறந்ததுடன் 500க்கும் மேற்பட்ட படையினர் ஊனமடைந்தும், பெருமளவு செலவும் இந்தியாவுக்கு ஏற்பட்டது. இடைநடுவிலேயே இலங்கை இந்தியப் படையை வெளியேறுமாறு உத்தரவிட்டது. பேரிழப்புக்களுடன் இந்தியப் படையினர் தாயகம் திரும்பினர்.

மீண்டும் இந்தியாவை வலிந்து இழுக்கு[ம்] இலங்கை, தமிழ் ஈழ விடுதலைப் புலி[களை] களை தோற்கடிக்க மட்டுமே இந்தி[ய] உதவியை எதிர்பார்க்கிறது. 1987ல் ஜே[.] ஆர் ஒரு தீர்வுத் திட்டத்தை என்றாலு[ம்] முன்வைத்தார். ஆனால் சந்திரிகாவிட[ம்] அது கூட இன்று இல்லை. தமிழ் மக்க[ள]ளுக்குப் பிரச்சினை உண்டு, அதை நியா[ய]யமான அளவு தீர்வை வழங்கி அமை[தி]தியை நிலை நாட்ட வேண்டும் என்[ற] போக்கிற்கே இடம் இல்லாது காண[ப்]படுகிறது. இலங்கையில் இனப்பிரச்சினை[த்] தீர வேண்டுமானால், பண்டா-செல்வ[ா] ஒப்பந்தத்தை விட டட்லி செல்வா ஒப்பந்தத்தை விட, இலங்கை இந்திய ஒப்பந்தத்தை விட மேலானதாக வழங்க[ப்] போகும் தீர்வு அமைய வேண்டும். ஆனா[ல்] பொதுஜன முன்னணி திணிக்க நினைக்கும் தீர்வோ, உப்புச் சப்பில்லாத ஒன்று[...]

மதக் கொள்கைகள் ஒருபுறம் இருக்கட்டும். நாட்டை பாதுகாக்க எல்லோரு[ம்] ஆயுதம் ஏந்தி போராட முன் வாருங்க[ள்] என டெல்லே குணவன்ச தேரோ அறை[கூ]கூவல் விடுத்துள்ளார். களுத்துறை[ச்] சிறைக் கைதிகளிடம் இருந்து யுத்த நி[தி] பெறப்பட்டும் வருகிறது. விளையாட்[டு] வீரராக இருந்தாலும் சரி, சிறைக் கைதி[]யாக இருந்தாலும் சரி யுத்தத்திற்கு நி[தி] வழங்குக என்பதே அரசின் கோரிக்கையாக உள்ளது. இத்தகைய சூழ்[] நிலையில் தமிழ் மக்களுக்குரிய தீர்வை[] அரசு முன்வைக்குமா என்பது கேள்விக்குரியதாகும்.

1977ல் இலங்கை இந்தியவை ஏமாற்றியது. மீண்டும் இந்தியாவை இலங்கை[] ஏமாற்றவே முயல்கின்றது. ஆனாலு[ம்] இந்தியா 100 மில்லியன் டொலர்களை உதவியாக வழங்கப் போவதாக உறுதி[] கூறிவிட்டுச் சென்றுள்ளது. ஜத்வன்[த்] சிங்கின் வருகையுடன் இலங்கையின் இனப்பிரச்சினை தீரப் போகின்றது என பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் இந்திய அரசோ இலங்கைக்கு உதவி செய்து விட்டு போகின்றது. மாறும் உலக மய மாக்கலில் நடைபெறுகின்ற திருவிளையாடல்களை உலகம் உணர வெகு நாட்கள் செல்லாது.

## மனித நேயம் படைத்த ஜெய்சங்கர்



மறைந்த நடிகர் ஜெய்சங்கர் மனித நேயம் படைத்தவர். தயாளசிந்தை உடையவர், இரக்கமுடையவர், சர்ச்சைகளில் சிக்காதவர், நல்ல நடிகர். திரை உலக வாழ்வில் இருந்தும், பூவுலக வாழ்வில் இருந்தும் பிரிந்துள்ளார்.

நடிகர் ஜெய்சங்கர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். நீதிபதி சுப்பிரமணியம் யோகம்பாள் தம்பதிகளின் புதல்வன். 1940ல் பிறந்த இவர் ஒரு பட்டதாரி ஆவார். நடிகர் சகஸ்ராமத்தினால் மேடை நடிகராக அறிமுகப்படுத்தப்பட்ட ஜெய்சங்கர் 'இரவும் பகலும்' என்ற தமிழ் படத்தின் மூலம் சினிமா உலகிற்குள் நுழைந்தார்.

நடிகர் ஜெய்சங்கரின் நூறாவது படமான 'இதயம் பார்க்கிறது' என்ற படமும் 200வது படமாக 'மலையூர் மம்பட்டியான்' என்ற படமும், 300வது படமாக 'நாளையசேதி' என்ற படமும் இடம் பெறுகிறது. ஜெய்சங்கர் நடித்த படங்களில் 'இரு வல்லவர்கள்', 'சி.ஐ.டி சங்கர்' ஆகிய படங்கள் அவரைப் புதியதொரு போக்கை பிரதிபலிக்கும் தமிழ் நடிகராக தமிழ் இரசிகர்கள் இடையே இடம் பெறச் செய்தது. இப்படங்கள் மூலம் இவர் தென்னகத்து ஜேம்ஸ்பொன்ட் என அழைக்கப்பட்டார்.

ஜெய்சங்கர் நடித்த 'குழந்தையும் தெய்வமும்' என்ற தமிழ் படம் இன்றும் ரசிகர் மத்தியில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது. நடிகை ஸ்ரீபிரியாவே ஜெய்சங்கருடன் அதிக படங்களில் நடித்துள்ளார். இவர் 18 படங்களில் ஜெய்சங்கருடன் நடித்துள்ளார். கே. ஆர். விஜயா 12 படங்களிலும், ஜெயலலிதா 10 படங்களிலும் நடித்துள்ளனர்.

ஜெய்சங்கர் கதாநாயகனாக நடித்த படமான 'குழந்தையும் தெய்வமும்' தேசிய விருது பெற்ற படமாகும். 'நூற்றுக்கு நூறு' படத்தின் மூலம் இவருக்கு சிறந்த நடிகருக்கான விருது கிடைத்தது. ஜெய்சங்கரின் இறுதிப்படமாக 'சின்னராசா' இடம் பெறுகிறது. இன்றைய கதாநாயகர்களான கமலஹாசன், ரஜனிகாந், ஆகியோருடன் கூட நல்ல உறவை ஜெய்சங்கர் வைத்திருந்தார்.

அனாதைகளுக்கு உதவுவதிலும், சூழல் பாதுகாப்பை மேம்படுத்துவதிலும் ஜெய்சங்கர் அதிகம் விருப்பம் உடையவராகவும், காணப்பட்டார். பொதுவாகவே தமிழ் நடிகர்கள் பற்றி பல்வேறுபட்ட பழிகள் மிகுந்த செய்திகளையே தமிழ் சமுதாயம் கேட்டுக் கொண்டு இருக்கிறது. இவர்களுள் சற்று வித்தியாசமாக தன்னை ஆக்கிக் கொண்ட நடிகர் ஜெய்சங்கர் இவ் உலக வாழ்வை நீத்துள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com



8- 89 தோல்வியின் பின் மக்கள்
டுதலை முன்னணி (ம.வி.மு) அரசிய
ல் வெளிப்படையான அரசியல் மாற்
ங்கள் ஏற்பட்டுள்ளதோடு, அதேபோல்
ப்பட்ட பெரும் தோல்வியினூடே
ளைஞர்களை கவரக்கூடிய செந்நிறக்
ட்சியாக வெளிப்படையாக இடத்தைப்
பற்றுக் கொள்ளக் கூடிய வளர்ச்சியைக்
ண்டுள்ளது. 1960ல் பழைய இடதுசாரி
ர் இலங்கையில் பெற்றிருந்த இடத்
ற்கு சமமாகும். வர்க்க அடிப்படையி
ம், மக்கள் மத்தியில் பெற்றிருந்த மதிப்
பாடும் சமப்படுத்த முடியாவிட்டாலும்,
டதுசாரிகள் எனக் கூறும் ம.வி.மு. மக்
ர் மத்தியில் முதலிடத்தைப் பெற்றி
ப்பது ரகசியமல்ல. இடதுசாரிப் புரட்சி
வலுவைக் கட்டி எழுப்ப ம.வி.மு.
திகளோடு இணைந்து செயல்படுவது
வசியமாகும். ஆகையினால் ம.வி.மு.
ளங்கிக் கொள்வது புரட்சிவாதிகளுக்கு
வசிய விடயமாகும். பழம் இடதுசாரி
ரின் மென்ஷேவிக் வாதத்திற்கெதிராக
போல்ஷேவிக்'' அரசியலை நிலைப்
டுத்த 1990 வரை போராடிய ம.வி.மு.
971 சிங்கள இளைஞர்களின், கிராமிய
விவசாயிகளின் கிளர்ச்சிக்குத் தலைமை
கித்தனர். அத்தோடு சிங்கள தேசப்பற்று
க்தியின் வெளிப்பாடாகச் செயல்பட்டு
988 - 89 குரே கிளர்ச்சியின் விளைவுகளை
னுபவிக்க வேண்டியிருந்தது. தமது
ழைய தலைவர்கள் அனைவரையும் பலி
கொடுத்த ம.வி.மு. இன்று அரசியல் அரங்
ல் ஒரு புதிய அத்தியாயத்தை நோக்கிப்
யணம் செய்கிறது.


குறிப்பாக ஏனைய இடதுசாரி அமைப்பு
ள் சம்பந்தமாக நியாயமான நிலைப்
ாட்டை மேற்கொள்வது ஒரு முக்கிய
ம்சமாகும். ஒன்றுபட்ட ஆர்பாட்டத்
ின் மூலம் 1999 ஆண்டு ஜனாதிபதி தேர்த
ில் இடதுசாரி பொது வேட்பாளரை
ன்வைப்பது வரை அவர்கள் செல்ல
ரிட்டது. குறிப்பாக ந.ச.ச.க. உட்பட்ட
க்கிய இடதுசாரிகளுடன் நட்புரீதியான
மைப்பைக் கட்டி எழுப்புவதன் மூலம்
டதுசாரி வலுவை நிலைப்படுத்துதல்
து நோக்கமென அவர்கள் கூறினார்
ள். இத்தகைய நிலையில் பரந்துபட்ட
டதுசாரி மக்களுக்கு இடதுசாரிகள் பற்றி
ரு நம்பிக்கை உருவாகியது.

னாதிபதி தேர்தலின் பின் ம.வி.மு.
டதுசாரிகள் சம்பந்தமாக ஒருமன
லைப்பாட்டை மேற்கொண்டேதோடு
டதுசாரி உறவுகளுக்கு எதிராக ஒரு கருத்
தையும் வெளியிடவில்லை. அவர்கள்
டுத்த தேர்தலுக்கு அவர்களின் கட்சியை
யத்தம் செய்வதைக் காணக்கூடியதாக
ருந்தது. அது 1000 கூட்டங்களை நடத்
ம் இயக்கமாகும். அது வெற்றி தந்த
ாகத் தெரியவில்லை. இதைவிடுத்து
ீண்டும் ம.வி.மு. புதிய இடதுசாரி கட்சி
ளுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்
கொள்ள விருப்பத்தை காட்ட ஆரம்பித்
துள்ளனர். அன்று மாற்று இடதுசாரி சக்
தியை கட்டி எழுப்புவோம் என்பதற்கு
ாறாக, ''தனியார் மயம், கொள்ளை,
னநாயகவிரோத வேலைத்திட்டங்களை
திர்த்து வெகுஜன சக்தியை ஐக்கியப்
டுத்துவோம்'' என்ற சுலோகத்தை வைத்
துள்ளனர். இது ம.வி.மு. பின்வாங்க
ரம்பித்துள்ளது என்பதை தெளிவு
டுத்துகிறது. தமது இடதுசாரி தோற்ற
்தை பாதுகாத்து அதைப் பயன்படுத்தி
ரந்த இடதுசாரி வலுப்பக்கம் சாய்வதற்கு
டதுசாரிகளைப் பயன்படுத்திக் கொள்
வது அவசியம் என அவர்கள் எண்ண
ரம்பித்துள்ளனர். சிங்கள இனவாத
திகார சக்திகள் முன்வந்துள்ளதும் இன
ாத யுத்தம் தீவிரமடைந்துள்ளதன்
ாரணமாக இந்நிலை மோசமான
நிலைக்குத் திரும்பியுள்ளது.

அடக்குமுறை, உலகவங்கியின் வேலைத்
திட்டங்கள், ஜனநாயகம் பற்றி விமர்
சிக்கும் ம.வி.மு. அரசின் முக்கிய விடய
மான யுத்தம் பற்றி நிச்சயமான அல்லது
தெளிவான நிலைபற்றி மிகக் கவனமான
மௌனம் சாதிக்கிறது. யுத்தம் தீவிர
டைய அதில் தன்னை மறைத்துக்கொண்டு
ஜனநாயகத்தை சுருட்டுவதற்கெதிராக

ஆர்ப்பாட்டத்தை ம.வி.மு. தன்னிச்சையாக நிறுத்திக் கொண்டது. இதுபற்றி டில்வின் விடுத்துள்ள அறிக்கை நகைப்புக்கிடமானது. மட்டுமின்றி, இடதுசாரிகளின் நம்பிக்கைச் சிதறுவதுமாகும். சந்திரிகா தனது அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு மற்ற கட்சிகளின் இணக்கத்தைப் பெற்றுக் கொள்ள காட்டிய வட்டமேசைக் கலந்துரையாடலில் ம.வி.மு. பங்கு பற்றியதனால் அதனை அரசு நன்றாகப் பயன்படுத்திக் கொண்டது.

இன்றைய அரசியலில் யுத்தமே முக்கிய விடயமாகும். தேசிய இனப்பிரச்சினை காரணமாகவே இவ்யுத்தம் ஏற்பட்டுள்ளது. தமிழ் விடுதலைப் போராட்டம் வெளிப்படையா சிங்கள பௌத்த ஆட்சியதிகாரத்தை சிதைப்பதாகும். இதனால் இது தமிழர் சிங்களவர்களுக்கிடையிலான போராட்டமாகத் தோன்றுகிறது. இவ்விரு இனங்களிலும் தெளிவாக மார்க்சியத்தைப் புரிந்து கொண்டவர்களுக்கு மட்டுமே இச்சிக்கலை சரியாகப் புரிந்து




கொள்ள முடியும். மார்க்சிய தத்துவத்திலிருந்து நோக்கும் எமக்கு மட்டுமே இப்பிரச்சினை இல்லை.

இப்பொழுது இதன் பிரதான காடர்கள், சிங்கள, கிராமிய இளைஞர்களாவர். இச்சக்திகள் இன்றைய ஒற்றை ஆட்சியை பாதுகாக்க வேண்டியது தமது கடமை எனக் கருதுவதாகவே தெரிகின்றது. இது அவர்களின் அரசியல் நிலைப்பாடுகளில் காலத்திற்குக் காலம் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளிலிருந்து விளங்குகிறது.

1990 தசாப்தங்களில் ம.வி.மு. கட்டமைப்பில் பல முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கடந்த காலங்களில் புதிய தொழிலாளர்கள் மத்தியில் இடம்பிடித்துக் கொள்ளக்கூடியதாக வளர்ந்துள்ளது. அதன்மூலம் தொழிற்சங்க நடவடிக்கைகளை அண்மித்ததும், நகர்ப்புறங்களில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியும், பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பிரிவினர் இணைந்திருக்கின்றனர். இவர்களின் அழுத்தங்கள், இத்தலைவர்களிடம் பிரகாசிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதன் தாக்கங்கள், கடந்த காலங்களில் ம.வி.மு. மேற்கொண்ட ஒவ்வொரு நிலைப்பாடுகளில் காணக்கூடியதாக இருந்ததோடு, இவ்வறிகுறிகள் ம.வி.மு. மட்டுமல்ல பொதுவாக இடதுசாரி சக்திகளின் எதிர்காலம் சம்பந்தமாக முக்கியத்துவம் பெறுவதை நாம் மறந்து விடக்கூடாது. தேசாபிமானச் சக்திகள் ம.வி.மு. தலைமையிலிருந்து விலகிச் சென்றிருந்தாலும் ஆரம்பகாலம் தொட்டு ம.வி.மு. வேரூன்றியிருந்த சிங்கள கிராமிய இளைஞர் சக்திகளும், அரசியலும் முற்றுமுழுதாக ம.வி.மு.யிலிருந்து நீங்க வில்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்ள

வேண்டும். அதன் இன்றைய நிலைப்பாடும் நடவடிக்கைகளையும் அவதானிக்கும்பொழுது இதுமாறிக் கொண்டிருக்கும் காலகட்டம் எனக் கூறலாம்.

## அரசியல்

இடைக்கிடை ம.வி.மு. மேற்கொண்ட நடவடிக்கைகள் தந்திரோபாயங்கள் முக்கியமல்ல். ஏனெனில் சிறுமுதலாளித்துவ அரசியல், சக்திகள் திரைச்சி செய்வது முதல், பாராளுமன்ற ஜனநாயகம் வரை செயல்படலாம். இன்று ம.வி.மு. அவர்களின் பாராளுமன்ற பிரதேசசபை, மாகாணசபைகளின் பிரதிநிதித்துவம் மூலம், வீதிகள், வைத்தியசாலைகள், மற்றும் சமூக நலன்புரி வேலைத்திட்டங்களை மேற்கொள்வதன் பாராளுமன்றவாத இடதுசாரியாகக் காட்டி முதலாளித்துவம் பொறுத்துக்கொள்ளக்கூடிய அடிப்படைத் தந்திரோபயமாகும். இவ்வாறான பாராளுமன்றவாதியாகக் காட்டிச் செயல்படுவதன் மூலம் முதலாளித்துவ அடக்குமுறையிலிருந்து தப்பலாம் என நினைப்பது படுமுட்டாள்தனமாகும்.

இவர்கள் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் லெனினைவிட இவர்கள் மார்க்சிய தத்துவங்களை விளங்கியவர்கள் போல் செயல்படுகின்றனர். தேசிய இனப்பிரச்சினை ஜனநாயகப் புரட்சியில் மிஞ்சிய விடயம் என்பதை ஏற்றுக் கொள்வதில்லை. அது பொதுவுடமை ஆட்சியிலே தீர்க்கக்கூடிய விடயம் என்பது அவர்களின் கருத்தாகும். அவர்கள் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் லெனின் பிழை எனக் கூறுபவர்கள் றோசா லக்சம்பேர்க் சரி என்றும் கூறுவதில்லை. ஆனால் செய்வது ட்ரொட்ஸ்கியும் றோசாவும் பிழை என்று கூறியவற்றையாகும். அது பாட்டாளி மக்களின் ஐக்கியத்தை உருவாக்குவது பற்றியதாகும். ஒடுக்கப்பட்ட இனத்தின் உரிமைக்குப் போராடாத எந்த ஒரு கட்சியும், ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை ஐக்கியப்படுத்த முடியாது. மார்க்சியத்தின் அடிப்படை நிலைப்பாடும் அதுவேயாகும்.

முதலாளித்துவத்தினால், தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஆகையால் பொதுவுடமை ஆட்சிவரும்வரை அவர்கள் பொறுத்திருக்க வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிந்து செல்லும் போராட்டம், பொதுவுடமை மலரத்தடையாகும். அதனால் அவர்கள் பிரிவினையை எதிர்க்கிறார்கள். இன்று பிரிவினையைக் முதலாளித்துவ வர்க்கமும், இனவாதச் சக்திகளும், ஏகாதிபத்தியவாதிகள், உள்ளிட்ட அனைத்து முதலாளித்துவ நாடுகளும், தாம், இலங்கையர் ஒற்றை யாட்சியை ஆதரிப்பதென்றே கூறுகின்றனர். பிரிக்கப்படாத மண் என்று சிங்கள முதலாளித்துவம் கூறுவதின் உண்மையான விளக்கம் அவர்கள் தமிழ் மக்களின் மீது ஆட்சியதிகாரத்தை செலுத்த வேண்டுமென்பதாகும்.

ம.வி.மு. எந்த அளவிற்கு நல் நோக்கத்திற்காகச் செயல்படுகிறதோ பிரிவினைக்கு எதிராக அவர்களின் போராட்டம் தமிழ் ஒடுக்கப்பட்ட மக்களை இனவாதத்திற்கு தள்ளுவதோடு பொதுவுடமைக்கான போராட்டம் மேலும் விலகிப் போவது நிச்சயமாகும்.

முதலாளித்துவம் மிகவும் கவனமாக இச்சிக்கலுக்குத் தீர்வாக பிரதேச சுயவாட்சியை முன்வைக்கிறது. ஆனால் தேசிய இனப்பிரச்சினைக்கு ஜனநாயகத்தீர்வாக லெனின் முன்வைத்தது ஒரு இனத்திற்கு அளிக்கப்படும் ஒன்றாக அல்ல. அது எந்த ஒரு இனப்பிரிவிற்குமுள்ள நீக்க முடியாத ஒன்றுமட்டுமல்ல அது அவ்வினத்தினது ஜனநாயக உரிமையாகும்.


பொதுவுடமை அரசாங்கம் அமைக்கும் வரை பிரதேச சுயவாட்சிக்கு ம.வி.மு. எதிராகும். சுயவாட்சி அதிகாரங்களை அளிக்க மேற்கொள்ளும் முயற்சிக்குக்கூட பிரிவினைக்கு வலுவளிக்கும் விடயமென அவர்கள் கருதுகின்றனர். தோழர் டில்வின் சில்வா ஜனாதிபதி அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்திலிருந்து தெளிவாகிறது.

தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் ம.வி.மு. தெரிந்தோ, தெரியாமலோ சந்தர்ப்பவாத நிலைப்பாட்டை கொண்டுள்ளது. இதற்கிடையில் முதல்முறையாக ம.வி.மு. சமத்துவ அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத்தரும்படி அரசிற்கு விடுத்திருக்கும் வேண்டுகோள், அவர்கள் பழைய நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்குவதற்கு மேற்கொண்ட முயற்சி என்று கூறலாம். ஆனால் மேலும் ஒரு கேள்வி எழுகிறது. அது இந்த சமத்துவம் என்ன என்பதாகும். சமூக, அரசியல், பொருளாதார சமத்துவத்தை முதலாளித்துவ வர்க்கத்தினால் ஏற்படுத்த முடியாது. ஆகையால் சமத்துவ அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வளிக்கும்படி அரசை வலியுறுத்துவது கேலிக்கூத்தாகும். முதலாளித்துவ நாடுகளை விட சமத்துவம் இருந்து ஸ்டாலினிசவாத ஆட்சியில், தேசிய இனப்பிரச்சினை தீராது மட்டுமல்ல, குறைந்தளவாவது நடந்ததா? யூகோஸ்லாவிய, சோவியத் நாடுகளைப் பாருங்கள் சமூக சமத்துவமின்மை, தேசிய இனச்சிக்கலை ஏற்படுத்தவே செய்யும். ஆகையால் பல்வேறு இனங்கள் பற்றிய சிக்கலில், வெறும் சமத்துவம் என்ற கருத்தில் பொதுவாக விளங்கிக் கொள்வது முடியாத காரியமாகும்.

www.padippakam.com



# சியாராலியோனில் பகற்கொள்ளை



**உலகமயமாக்கல்** என்ற போர்வையில் வளர்முக நாடுகள் கொள்ளையடிக்கப்படும் விதத்தை ஆபிரிக்க நாடுகளை பார்க்கின்றபோது உண்மைகள் அம்பலத்திற்கு வருகின்றன. எதியோப்பியாவுக்கும், எரித்தியாவுக்கும் இடையே ஓர் போர் நடைபெறுகின்றது. கொங்கோவில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை, அங்கோலா, சூடான். ஆகிய நாடுகளில் நடைபெறும் சம்பவங்கள் , அமைதியிழந்து சோகத்துடன் காணப்படும் சியாராலியோன். மேற்படி நாடுகளில் நடைபெறும் பிரச்சினைகளுக்கு மூலகர்த்தாக்கள் யார் என்பதை மூடி மறைக்கும் முயற்சிகளில் மேற்குலக செய்தி ஊடகங்கள் ஈடுபடுகின்றன. இம் முயற்சியானது "முழு பூசணிக்காயை சோற்றில் மறைத்த" கதையாக இருக்கிறது. குறிப்பாக பிரித்தானியச் செய்தி ஊடகங்கள் சியாராலியோனில் நடைபெறுவதை வேறு வழியில் திசை திருப்பும் செய்திகளை வெளியிடுகின்றன. பிரித்தானிய செய்தி ஊடகங்கள், சியாராலியோனில் பூர்வீக குடிகளைச் சேர்ந்த சிலர் அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருவதாக செய்திகளை வெளியிடுகின்றன. ஜனாதிபதியாக முறைப்படி தேர்வு செய்யப்பட்ட நாட்டின் தலைவரை, சாங்கோ தலைமையிலான கிளர்ச்சியாளர்கள் அச்சுறுத்தி வருகின்றனர் என்பது போன்ற செய்திகளையே வெளியிடுகின்றன.

உண்மையில் சியாராலியோனில் நடைபெறும் பிரச்சினைக்கு மூலவேராக பிரித்தானிய கம்பனிகளே காரணமாக உள்ளன. இக்கம்பனிகளும் உள்ளூர் ஊழல் நிறைந்த அரசியல் வாதிகளும் கைகோர்த்து செய்படுவதாலேயே சியாராலியோன் உள்நாட்டு குழப்பங்கள் நிறைந்த நாடாகக் காணப்படுகின்றது.

சியாராலியோன் .1406ல் போர்த்துக்கேயரால் கண்டு பிடிக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது. அமெரிக்க காலணி நாடுகளுடன் அடிமை வர்த்தகம் செய்வதற்கு சியாராலியோன் கடற்கரைப் பிரதேசங்களைப் போர்த்துக்கேயர் பயன்படுத்தியதாக அறியப்படுகிறது. 18ம் நூற்றாண்டில் பிரித்தானியா சியாராலியோனைத் தனது ஆழுகைக்கு உட்படுத்தியது. அமெரிக்க சுதந்திரப் போராட்ட காலத்தில் பிரித்தானியாவுக்கு சார்பாக போராடிய அடிமைகளை குடியேற்ற பிரித்தானியா சியாராலியோனை பயன்படுத்தியது. கிட்டத்தட்ட 70,000 அடிமைகளை பிரித்தானியா சியாராலியோன் கடற்கரைப் பகுதியில் குடியேற்றியது.

பிரித்தானியாவில் குடியேற்றப்பட்டவர்களுக்கும், கடற்கரைப் பிரதேசங்களை தவிர்த்து மலைப் பிரதேசங்களில் வசித்தவர்களுக்கும் இடையே பல பிரச்சினைகள் இருந்து வந்துள்ளன. கடற்கரை பகுதிகளில் குடியேற்றப்பட்டவர்களுக்கு அதிக வசதிகளை பிரித்தானியா அரசு செய்து கொடுத்ததால், கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் பல்வேறு வகைகளில் வளர்ச்சியடைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

1961ல் சியாராலியோனுக்கு சுதந்திரம் கிடைத்துள்ளது. வைரம், இரும்பு, அமோனியம் போன்ற மூலப் பொருட்களை சியாராலியோன் அதிகம் கொண்டிருந்ததால், பல சர்வதேசக் கம்பனிகளின் செயற்பாடுகள் இம் மண்ணில் அதிகமாக காணப்பட்டுள்ளது. சுதந்திரம் அடைந்தவுடன் மூலப் பொருட்களை தேசிய மயமாக்கி அபிவிருத்தி வழிகளில் நாட்டைக் கொண்டு செல்ல சியாராலியோன் ஆட்சியாளர்கள், விரும்பினர். இதைக் கண்டு அச்சம் கொண்ட பல்தேசிய கம்பனிகள், தமது நடவடிக்கைகளை அதிகரிக்கத் தொடங்கின. உலகிலேயே அதிக புரட்சிகள் நடந்த நாடாகக் கூட சியாராலியோன் கூறப்படுவதுண்டு. தளபதியால் புரட்சி, கப்ரினால் புரட்சி, இடைநிலை இராணுவ தளபதிகளால் புரட்சி என பல்வேறு புரட்சிகள் இம் மண்ணை ஆக்கிரமித்துள்ள இவ்வ் அனைத்து புரட்சிகளும் இராணுவம் சம்பந்தப்பட்ட புரட்சிகளாகவே காணப்படுகின்றன.

இன்று ஊழல்கள் அதிகம் நிறைந்த நாடாக சியாராலியோன் காணப்படுகிறது. ஜனாதிபதியின் செயலாளரே அரசின் உயர் பதவிகளை விலை பேசி விற்கும் நிலை அங்கு காணப்படுகிறது. முதலில் நியமனக் கடிதத்துடன் ஒரு தொகைப் பணம் பெறப்படுகிறது. பின்பு சலுகைகளை வழங்குவதற்கு மாதாந்தம் லஞ்சப் பணம் பெறப்படுகின்றது.

சியாராலியோன் சுதந்திரம் அடைந்ததில் இருந்து உள்நாட்டு இன முரண்பாடுகளும் அதிகரித்தே வந்துள்ளது. சியாராலியோனில் மூன்று பிரதான இனக்குழுக்கள் காணப்படுகின்றன. சியாராலியோனில் உள்ள இனங்களின் உயர் குடியினர்களிடையே பிரச்சினைகள் தோன்றியிருந்தன. தென்பகுதியில் வாழ்ந்த "மென்டே" என்ற இனக்குழுவினரும், வடபகுதியில் "ரெனே" என்ற குழுவினரும், கரையோரப் பகுதியில் குடியேறியிருந்த சுதந்திர அடிமைகளின் வழித் தோன்றல்களுக்கும் இடையிடையேயே பிரச்சினைகள் இருந்து வந்தன. இம் மோதல்கள் கட்டுப்பாட்டுக்குள்ளே இருந்து வந்துள்ளது. இவை ஒரு போதும் பெரும் மோதல்களாக நாட்டையே உலுப்பும் நிலைக்குச் செல்லவில்லை.

சுதந்திரத்தின பின்பு பல்வேறுபட்ட ஊழல் தலைவர்களால் சியாராலியோன் ஆளப்பட்டு வந்தது. மார்காய் சகோதரர்கள் எனப்டுவோர் சியாராலியோன் மக்கள் கட்சி சார்பில் ஆட்சி நடத்தியுள்ளனர். 1968ல் சர்வஜன காங்கிரஸ் கட்சி ஆட்சியை நடத்தியுள்ளது. இதன் தலைவராக சயிக்கஸ்ரீபன் என்பவர் இருந்துள்ளார். ஸ்ரீபன் காலத்தில் ஒரு கட்சி ஆட்சி முறை கொண்டுவரப்பட்டு உள்ளது. மார்காய் சகோதரர்கள் ஆட்சியை விட ஸ்ரீபனின் ஆட்சி ஊழலின் உச்சக்கட்டத்தில் இருந்திருக்கிறது. இவரின் பின்பு ஆயுதப் படைகளின் தளபதி யோசெப் மொம்பா பதவிக்கு வந்தார். அவரும் ஸ்ரீபனை விட ஊழலில் அதிகம் ஈடுபாடு உடையவராக விளங்கினார்.

இதன்பின்பு 1992ல் இராணுவ இடைநிலை அதிகாரிகள் இவரைத் தாக்கி எறிந்து விட்டு பதவிக்கு வந்தனர். புதிதாக பதவியேற்றவர்களுக்கு புரட்சியாளர்களை கட்டுப்படுத்தும் பணி அதிகமாக இருந்தது. ஏனென்றால் புரட்சிகர ஐக்கிய முன்னணி என்ற புரட்சி அமைப்பின் கரந்தடிப்படையின் முதல் பிரிவினர் சியாராலியோனில் காலடி எடுத்து வைத்தது இக்காலப்பகுதியிலாகும். உலக அரங்கில் புரட்சிகர அமைப்புக்களின் தோற்றம் 1960 களிலும், 1970 களிலும் அதிகம் காணப்பட்டது. இதன் தாக்கம் சியாராலியோனிலும் காணப்பட்டது. 1960 களில் சியாராலியோனில் மாணவ அமைப்புகளின் புரட்சிகர செயற்பாடுகள் அதிகம் நிறைந்து காணப்பட்டது. இவர்கள் லிபியாவுடன் தொடர்பு கொண்டு ஆயுதப் பயிற்சியும் பெற்று இருந்தனர். ஆனால் ஆட்சியாளர்கள் மாணவ அமைப்பினரை இரக்கமற்ற முறையில் வேட்டையாடி வந்தனர். உள்நாட்டுப் பொருளாதாரம் மோசமான நிலையை அடைய புரட்சிகர தன்மைக்கு சாதகமான நிலைகள் தோன்ற சியாராலியோனுக்கு ஆயுதம் தாங்கிய புரட்சி தேவை என்ற நிலை மேலோங்கி வந்தது. இதனால் தற்போதைய புரட்சிகர ஐக்கிய முன்னணி தலைவர் சாந்கோவ் தலைமையிலான முதல் கரந்தடிப்படையினர் 1991ல் சியாராலியோனுக்குள் நுழைந்தனர். இவர்களின் அமைப்பில் ஆரம்பத்தில் இருந்தே ஏராளமானோர் இணைந்தனர். முதலில் மாணவர்களின் எண்ணிக்கை இவ் அமைப்பில் அதிகமாக இருந்த போதிலும் பின்பு, நகர்ப்புறத்தில் இருந்த பல்வேறுபட்ட தரப்பினரின் வருகையால் மாணவர் இந்த அமைப்பில் இருந்து விலகி விட்டனர். இதனால் புரட்சிகர ஐக்கிய அமைப்பின் கொள்கையிலும் பல ஓட்டைகள் விழத் தொடங்கின. அண்மையில் இவ் அமைப்பின் சார்பில் ஒருவர் பின்வருமாறு கருத்து தெரிவித்திருந்தார். "இராணுவ ரீதியான ஆயுதப் போராட்டம் தற்போது அர்த்தமற்றதாகி விட்டது. சமூக பொருளாதார அடிப்படையைக் கொண்ட பேச்சுவார்த்தையே இப்போது அவசியமாகும்.

தற்போது சங்கோ அரச படைகளினால் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கிறார். இவர் கைது செய்யப்பட்டு நிர்வாணம் ஆக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். இன்று ஐக்கிய நாடுகள் சபையும், அதன் பாதுகாப்புப் படைகளும், சியாராலியோனில் நிலை கொண்டுள்ளன. இவர்களால் சியாராலியோனில் சமூக பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்கமுடியுமா? உலக நாடுகள் முழுவதிலும் இன்று அமைதியின்மையே காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் பாரிய சமூக ஏற்றத் தாழ்வே.

சியாராலியோன் அதிக கனிம வளங் களைக் கொண்ட நாடாகும். இதனா தான், மேற்குலக நாடுகள் சியாரா லியோனுக்குள் நிற்கின்றன. பல்தேசி கம்பனிகள் சியாராலியோனை மேலு சுரண்டுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை அனுமதிக்க போகின்றதா? அல்லது வளமான சியாராலியோனை வள கொழிக்க வைக்கப் போகின்றதா?

இன்று வளர்ச்சி அடைந்த நாடுகளுக் கும், வளர்முக நாடுகளுக்குமிடையே யான ஏற்றத்தாழ்வு அதிகமாக காண படுகின்றது. இதேபோல் வளர்முக நாடு களில் இருக்கும் ஏழை பணக்கார இடை வெளியும் அதிகமாகக் காணப்படுகிறது மனித ஏற்றத்தாழ்வு இருக்கும் வ அமைதி என்பது கேலிக்குரியதாகும் சியாராலியோனில் ஐக்கிய நாடுக முயற்சி தான் வாலை நிமிர்த்துவ போல் ஆகும்.

## தென்மராட்சி கொடுமைகள் மறைக்கப்படுகின்றன

எதிலுமே சம்பந்தப்படாத பல அப்பாவிப் பொதுமக்கள் தென்மராட்சியில் மரணத்தைத் தழுவினர். பலத்த காயங்களுக்கு உள்ளாகி உள்ளனர் எண்ணற்ற கட்டிடங்கள் சிதறிப் போய்க் கிடக்கின்றன. தணிக்கை என்னும் அரக்கனினால் இந்த அனர்த்தங்கள் யாவும் மறைக்கப்பட்டது. மன்னார் ஆயர் மூலமே சில செய்திகள் முதலில் வெளியே வந்தன. இன்று நினைவஞ்சலிகள் மூலம் வெளிவரத் தொடங்கியுள்ளது. இடைக்கால நிர்வாகம், இணைப்பு, காணி வசதிகளும் என்பவற்றை இங்குள்ளவர்கள் பேசுகின்றனர். ஆனால் அங்குள்ள மக்களோ தினம் தினம் அழிந்து கொண்டு இருக்கின்றனர். போரின் மூலம் தமிழ் மக்கள் கொல்லப்படுகின்றனர். இதற்கு பேச்சு வார்த்தைகள் என்னும் செப்படி வித்தை பாதுகாப்பு வழங்குகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



# வாழ்விடத்தை இழந்து பத்து வருடங்கள்

**1990ம்** ஆண்டு யூன் மாதம் 11ம் தேதி. தமது மண்ணில் இருந்து வலிகாமம் வடக்கு மக்கள் விரட்டப்பட்டனர். இன்று வரை அரசாங்கம் இம்மக்களை அவர்களது சொந்த மண்ணில் குடியேற அனுமதிக்கவில்லை. மிகப்பரந்தளவு நிலப்பரப்பைக் கொண்டதும், பெறுமதி மிக்கதுமான இந்நிலப்பகுதியை அரசாங்கம் இராணுவ தேவைக்காக தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது.

இரண்டு பெரிய சீமெந்து தொழிற்சாலைகள் உற்பத்தியின்றி முடங்கி கிடக்கின்றன. இத் தொழிற் சாலைகளில் வேலை செய்த 5000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சிதறிப்போய் வாழ்கின்றனர். பெரிய எதிர்பார்ப்புடன் பெருந்தொகை பணத்தை வாரி இறைத்து அபிவிருத்தி செய்யப்பட்ட காங்கேசன்துறை துறைமுகம், இன்று இராணுவ தேவைக்காக மாத்திரம் பாவிக்கப்படுகிறது. மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் என்ன நிலையில் இருக்கிறது என்பது எவருக்கும் தெரியாது. ஆயிரக்கணக்கான வீடுகள், பாடசாலைகள், அரச, தனியார் காரியாலயங்கள், மருத்துவ மனைகள், புகழ் பெற்ற இந்துக் கோயில்கள், கிறிஸ்தவ மதவாலயங்கள், பண்ணைகள், பெரிய தோட்டங்கள், இவை யாவற்றிற்கும் என்ன நடந்திருக்கும் என்ற அச்ச உணர்வுகளே இன்று வலி வடக்கு மக்களை ஆட்டிப் படைத்துக் கொண்டு இருக்கிறது.

1987ம் ஆண்டு காலப்பகுதியிலும் வலிகாமம் வடக்கு மக்கள், அவர்களது மண்ணில் இருந்து விரட்டப்பட்டு இருந்தனர். ஆனால் இங்ஙனம் விரட்டப்பட்டமை, ஒரு குறுகிய காலப்பகுதியாக இருந்தது. அங்ஙனம் இருந்தும் அக் குறுகிய கால இடைவெளிக்குள், இம்மக்கள் மிகப் பெரியளவு இழப்புக்களைச் சந்தித்தனர். நூற்றுக்கணக்கான வீடுகள் தரைமட்டம் ஆக்கப்பட்டதுடன், மக்களின் கோடிக்கான ரூபாய் பெறுமதியுடைய சொத்துக்களும் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது. இப்பொருட்கள் தென் இலங்கை கொண்டு வரப்பட்டது என்ற கசப்பான உண்மையை வலி.வடக்கு மக்கள் மறந்து விடவில்லை. ஒரு குறுகிய கால இடைவெளிக்குள் மிகப்பெரிய அனர்த்தத்தை இலங்கை இராணுவம் வலிகாமம் வடக்கு மக்களுக்கு உண்டு பண்ணியிருந்தது. ஆனால் அன்று வலிகாமம் வடக்கு மக்கள் தமது வாழ்விடத்தை விட்டு விரட்டப்பட்டு 10 வருடங்கள் ஓடி விட்டன. இக்காலப் பகுதிக்குள் அவர்களது குடியிருப்புக்கள், சொத்துக்கள் ஆகியவற்றிற்கு என்ன நடந்திருக்கும் என்ற அச்ச உணர்வால் இம்மக்கள் விறைத்துப் போன நிலையில் உள்ளனர்.

வலிகாமம் வடக்கு பகுதியின் பெரும் பகுதி நிலம் நல்ல தரத்தை உடையதாகும். எந்தப் பயிரை உற்பத்தி செய்தாலும், அதிக விளைச்சலை கொடுக்கக் கூடியதன்மை இம்மண்ணுக்கு உண்டு. இத்தகைய பயன்தரும் பூமி இன்று மயான பூமியாக காட்சி தருகிறது. இம்மண்ணை நம்பி வாழ்ந்த விவசாய குடும்பங்கள் எந்த தொழிலும் இன்றி நடுத்தெருவில் நிற்கின்றன. வாழ்விடத்தை விட்டு இடம் பெயர்வது என்பது, தமிழ் மக்களுக்கு அன்றாட கடமையாகி விட்டது. முதலில் வலிகாமம் வடக்கு மக்களே தமது வாழ்விடத்தை விட்டு இடம் பெயர்ந்தனர். தற்போது வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற அனைவருமே இடம் பெயர்ந்து வாழும் சூழ் நிலையில் உள்ளனர்.

வலிகாமம் வடக்கில் மீன்பிடித்தொழில் முக்கிய வருவாயை வழங்கும் தொழிலாக இருந்தது. பலாலி, மயிலிட்டி, ஊறணி, காங்கேசன்துறை, கீரிமலை ஆகிய கரையோர பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான மீனவர்கள் மீன்பிடித் தொழிலை செய்து வந்தனர். குறிப்பாக மயிலிட்டிப் பகுதியில் ஆழ்கடலில் மீன்பிடித் தொழிலைச் செய்யும் பல வசதிகள் இருந்தன. இவை யாவும் இன்று சின்னாபின்னம் ஆக்கப்பட்டுள்ளது. இங்கே வாழ்ந்த ஆயிரக்கணக்கான மீனவ குடும்பங்கள் , குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம் பெயர்ந்து வாழ்கின்றனர். வலிகாமம் வடக்கில் கடல் அரிப்பின் அபாயம் நெடுநாட்களாக இருந்து வந்தது. கடந்த 10 வருடங்களாக மக்கள் இடம் பெயர்ந்துள்ளதால் கடல் அரிப்பின் தாக்கம் எவ்வளவு தூரம் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும்.

வலிகாமம் வடக்கு, மக்களுக்காக் தமிழ் அரசியல் தலைமைகள் உருப்படியான நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை. வழமைபோல் பத்திரிகைகளில் அறிக்கை, பாராளுமன்றத்தில் ஒரு சில வார்த்தைகள், அல்லது ஜனாதிபதியைச் சந்திக்கும் போது இவ் விடயம் பற்றி பேசுவோம், என்பவற்றைத் தவிர வேறு ஏதாவது அவர்களால் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். ஆனால், நவசமாசக் கட்சி, புதிய ஜனநாயகக் கட்சி, ஐக்கிய சோசலிசக் கட்சி ஒன்றிணைந்து உருவாக்கிய புதிய இடதுசாரி முன்னணி தாக்கமான ஒரு போராட்டத்தை வலிகாமம் வடக்கு மக்களுக்காகச் செய்திருந்தனர். வெள்ளவத்தை சந்தைக்கு முன்பாக வலிகாமம் வடக்கு மக்களுக்கு நிலத்தை வழங்கு என்பதே இக்கட்சிகளின் பிரதான கோரிக்கையாக இருந்தது. இம்மறியல் போராட்டத்தில் மேற்படி கட்சிகளின் சிங்கள, தமிழ், முஸ்லிம் தோழர்கள், கலந்து கொண்டு வலிகாமம் வடக்கு மக்களுக்காக குரல் கொடுத்தனர். துரதிஸ்டமாக இதன் பின் இப் போராட்டம் முன் எடுக்கப்படவில்லை.

இராணுவ ஆக்கிரமிப்பின் காரணமாக ஏராளமான பகுதிகள் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களிடம் இருந்து கரைந்து போய் உள்ளது. கிழக்கு மாகாணத்தில் கல்லோயாவில் இருந்து ஆரம்பமான மண்பறிப்பு வலிகாமம் வடக்கு ஊடாக காரைநகர் வரை வியாபித்து உள்ளது.

வலிகாமம் வடக்கு மக்கள் மீளக் குடியேறுவதா, பலாலியில் இருக்கும் இலங்கை இராணுவம் வெளியேறுவதா என்ற இரண்டு பிரச்சினைகள் இன்று அதி முக்கியம் பெற்றுள்ளது. சர்வதேச ரீதியாக இதே கதையாகத்தான் இருக்கிறது. எது எப்படி இருந்தாலும் வலிகாமம் மக்களின் நில இழப்பு நீண்ட நாள் விவகாரமாக மாறிவிட்டது. இதைத் தீர்ப்பதற்கு சகல சக்திகளின் ஆதரவும் அவசியமானதாகும்.

**- ந. நடராசா ஜனகன்**

# வளவ கங்கைக்கு தடுப்புச்சுவர்

# 2000 விவசாய குடும்பங்கள் நடுத்தெருவில்

உடவளவை பகுதியில் வளவை கங்கை ஓடும் பாதையின் இருபக்கத்திற்கும் கொங்கிறீற் தடுப்புச்சுவர் அமைக்கப்பட இருக்கிறது. இதனால் இப்பகுதியில் இவ் ஆற்று நீரை நம்பி விவசாயம் செய்த 2000 விவசாயக் குடும்பங்கள் செய்வதறியாது திகைப்படைந்து நிற்கின்றன. மேற்படி அரச திட்டத்தில் விவசாயிகளுக்கோ, சுற்றுப்புறச் சூழலுக்கோ எத்தகைய நன்மையும் கிடைக்கப்போவதில்லை. இப்பகுதியில், இவ்வளவு காலமும் பலன் கொடுத்து வந்த வாழை, பலா, தென்னை போன்ற மரங்கள் அழியும் நிலை ஏற்படப் போகிறது. இதனால், மேற்படி மரங்களின் மூலம் பலனைப் பெற்றுவந்த விவசாயிகள் வருமானம் பெரியளவில் இல்லாமல் போகின்றது. விரைவில் இப் பகுதி மரங்கள் எதுவும் அற்ற பாலை வனம் ஆகப் போகின்றது. இப்பகுதியில் மனித இனமோ, மிருகங்களோ அல்லது வேறு ஏதும் ஜீவராசிகளோ வாழமுடியாத நிலை உள்ளது. தற்போதே கனரக வாகனங்களின் மூலம் பாரிய மரங்களின் கிளைகள் யாவும் வெட்டப்பட்டு வருகிறது. மேற்படி மரங்கள் வெட்டியதற்கு, மேற்படி திட்டத்திற்கு பொறுப்பாக இருக்கும் பிரதேசவாசியான, சோமபால, மற்றும் மகாவலி நிர்வாகத்தின் அதிகாரியும் வெட்டப்பட்ட மரங்களுக்கு நஸ்ட ஈடு தருவதாக உறுதி கூறியுள்ளனர். ஆனால் இப்பகுதியில் உள்ள சிறிய மரங்களுக்கோ, வெட்டுவதற்கான அடையாளங்களை மேற்படி அதிகாரிகள் போட்டுவருகின்றனர். மறுபுறத்தில் மளவள நிறுவனத்தின் மற்றொரு அதிகாரியான ஜகத் புஸ்பகுமாரா கருத்து தெரிவிக்கையில் மேற்படி திட்டம் மக்கள் நன்மைக்காக போடப்பட்டது. எனவே ஒரு சதம் கூட நட்ட ஈடு வழங்கப்பட மாட்டாது என்கின்றார்.

இப்பகுதியில் வாழும் விவசாயிகள் மேற்படி திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த போது, மகாவலி அதிகாரி, இத்திட்டம் உலக வங்கியின் அனுசரணையுடன் தொடங்கப்பட்டது என கூறியுள்ளார். தற்போது தொடங்கப்பட்டுள்ள இந்த நாசகார நடவடிக்கையில் பாரிய மரங்கள் அழியப் போகிறது. விவசாயிகளுக்கு விளைநிலம் இல்லாமல் போகிறது. அத்துடன் அப்பகுதியின் சுற்றாடலுக்குப் பெரும் அபாயம் ஏற்படப்போகிறது. இது சம்பந்தமாக புதிய சமதர்மத்திற்கு விசேட செய்தியளித்த தனமல்வில பிரதேச சபை உறுப்பினர், எஸ்.பி.சிறிசேன மேற்படி ஆற்று நீருக்கு கொங்கிறீற் இட்டால், தண்ணீரை நீண்ட தூரம் கொண்டு போகலாம். ஆனால், ஆற்றின் கரையோரம் நிற்கும் பலன் தரும் மரங்கள் யாவும் அழிந்து போகும். அத்துடன் கிரியன்னார பகுதிக்கு அருகேயுள்ள பகுதிகளான கம்புறுகல, ரன்வலிகம, தாசெயலே போன்ற பிரதேசங்களில் கொங்கிறீற் வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பகுதி விவசாயிகள் விவசாயத்தின் மூலம் பெரிய இலாபம் பெறவில்லை. ஆனால் பலன் தரும் மரங்களான பலா, தென்னை, வாழை போன்றவற்றின் பலன்களை கொண்டே சீவித்துள்ளனர். கொங்கிறீற் வேலை தொடங்கியவுடன் இம்மரங்கள் யாவும் அழியத் தொடங்கியுள்ளன.

இப்பகுதியின் ஒன்றிணைந்த விவசாயிகள் சங்கத் தலைவரான பிதாரனகே சிறிசேன என்பவர், கருத்து தெரிவிக்கையில், மேற்படி திட்டம் பற்றி தம்மிடம் எதுவும் கேட்கப்படவில்லை என அதிருப்தி தெரிவித்தார். இத்திட்டம் இப்பகுதிக்கு தேவையற்ற ஒன்றாகும். மகாவலி நிர்வாகம் உலக வங்கியின் உத்தரவின் பேரிலேயே இதைச் செய்வதாக தெரிகிறது. இத்திட்டத்துக்கு ஜப்பானே உதவி செய்யப்போவதாக தெரிகிறது. இத்தகைய சுற்றாடல் பாதிப்பும், மனித துன்பமும் நிறைந்த இந்த திட்டத்திற்கு ஜப்பான் நாடும் உதவுகிறதே என்பதை நினைக்க கவலையாக இருக்கிறது. இவ்வளவு அழிவை உண்டுபண்ணும் திட்டத்தை கைவிடுமாறு இப்பகுதியில் உள்ள பல அமைப்புகள் சம்பந்தப்பட்ட நிர்வாகத்திடம் வேண்டுகோள் விடுத்த வண்ணமேயுள்ளன. ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் இத்திட்டம் உலக வங்கியின் அனுசரணையுடன் நடைபெறுவதால் எம்மால் நிற்பாட்ட முடியாது என கைவிரித்துள்ளனர்.

மேற்படி திட்டத்தினால் அழியும் இயற்கை வழங்களுக்கு எத்தகைய நட்ட ஈடும் வழங்கப்படமாட்டாது என சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். கடந்த 15 வருடங்களாக இப்பகுதியில் சீவித்து வரும் விதானகே நிபாலரஞ்சித் என்பவர் கருத்து தெரிவிக்கையில் தாம் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் வைத்திருந்தே விவசாயம் செய்வதாகவும், இதன் மூலமே எனது குடும்பத்தை நடத்தி வருகின்றேன் தற்போது இத்திட்டத்தால் எனது வருமானத்துக்கும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது. இப்பகுதியில் பெருமளவு நிலபரப்பு அந்நியநாட்டினர்க்கு விற்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு தண்ணீர் கிடைப்பதற்காகவே மேற்படி திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது என விதானகே தெரிவிக்கின்றார்.

மேற்படி திட்டத்திற்காக நில அளவை செய்த நில அளவையாளர்கள் கொங்கிறீற் இடப்பட்டாலும், மீற்றர் மூலம் தண்ணீர் வழங்கலாம், ஆனால், விவசாய நடவடிக்கைகளுக்கு தண்ணீர் வழங்க முடியாது என்றுள்ளனர்.

கடந்த 20 வருடகாலமாக இப்பகுதியில் சீவித்து வரும் டபிள்யூ.ஏ.கருணாதாசா, கருத்து தெரிவிக்கையில் இப்பகுதிகளுக்கு பெரும் அழிவு வரப் போகிறது. மரங்கள் வெட்டப்படுகின்றன. எனது வளவினுள் நின்ற 47க்கு மேற்பட்ட வாழைமரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. தற்போது மேலும் 110 வாழைமரங்களை அழிக்குமாறு கூறுகின்றனர்.

கொங்கிறீட் இடப்பட்டபின் இப்பிரதேச விவசாயிகளுக்கு குழாய்கள் மூலம் ஒரு

(தொடர்ச்சி பக்கம் 8...)

படிப்பகம்

www.padippakam.com



# பன்னாட்டுக் கம்பனிகளிடம் விலைபோன அரசு மக்கள் மீது சவாரி விட அங்கீகாரம்

**தமது** அன்றாட வாழ்விலும், சம காலத்தில் மாறிவரும் வேகமான சமூக பொருளாதார சூழலிலும் அடிகளையும், பேரிடிகளையும் சுமந்து கொண்டுள்ள இலங்கை வாழ் மக்களுக்கு 2000ம் ஆண்டு ஜூன் மாதம் மேலும் பேரிடிகளை சுமக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

சமயல் வாயுவின் விலை 105 ரூபாவால் அதிகரிப்பு. மின்சார கட்டணங்கள் 6-10% அதிகரிப்பு. தொலைபேசி கட்டண அதிகரிப்பு. நீர்வரியை அதிகரிக்க முடிவு என நாட்டின் ஒவ்வொரு குடிமகனினதும் உயிரோடும், வாழ்வோடும் ஊடாடும் பொருளாதார பேரிடிகள் வீழ்ந்தன.

ஆளும் பொதுசன முன்னணி அரசு பதவியேற்பதற்கு முன்னர் கொடுத்த வாக்குறுதிகளை 100% மீறிய அரசு என்பதை புரிந்து கொண்டால் இந்த பேரிடிகள் இன்னும் தொடரும் என்பதை புரிந்து கொள்வது சிரமமல்ல.

சகல அரச தொழில் முயற்சிகளையும் தனியாரிடமும், பண்ணாட்டு ராட்சத கம்பனிகளிடமும் தாரை வார்த்த அரசு, பாடநூல்கள் அச்சிடுவது விநியோகிப்பது வரை தனியார் கம்பனிகளிடம் வெள்ளித்தட்டத்தில் வழங்கியுள்ளது.

இந்நிலையில் நெஸ்லே கம்பனி பத்து இலட்சம் ரூபா பாதுகாப்பு நிதிக்கு காசோலை கொடுத்துவிட்டு ஒரே கியூவில் பால்மாவின் விலையை 10/- வால் அதிகரித்தது. வருடம் 2000 கோடி ரூபா அளவிலான தேயிலை ஏற்றுமதி வரியைக் இழந்த அரசு தோட்டத்துறையைத் தனியரிடம் கையளித்த அரசு ஆயிரக்கணக்கான கோடி கடனாக கொடுத்து விட்டு மீளபெற முடியாமல் திண்டாடுகிறது.

கட்டு நாயக்கா, பியகம, இரத்மலானை, பல்லேகலை, நாலந்தல, சிதுாவக்க என விரியும் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் இலட்சக்கணக்கான தொழிலாளரை மலிவான கூலிக்குச் சுரண்டி பன்னாட்டு நிறுவனங்கள் ஏப்பம் விட சுதந்திர பொருளாதார கொள்கை மடைதிறந்து விட்டுள்ளது.

அரசு கிட்டத்தட்ட நாட்டின் சகல வளங்களையும், எப்பாவல, பொஸ்பேட், புல்மோட்டை இல்மனைற், கரையோர சிறுவரும், பெண்களும் என எல்லாவகையான பௌதீக- மலை வளங்களையும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்றுள்ளது.

இங்கே " ஷெல்கேஸ்" விலையேற்றமும் கூட கைத்தொழில் துறைக்கு எந்த மதிப்பையும், ஏற்படுத்தாது. ஏனெனில் உலக சந்தை விலையிலும் குறைந்த விலைக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன சுத்திகரிப்பு ஆலையில் இருந்து உலக சந்தை விலையிலும் குறைந்த விலைக்கு கிடைப்பதால் இதன் விலை அதிகரிக்கப்படவில்லை என ஷெல்கேஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

பன்னாட்டு விலைகள் 100% த்தினால் அதிகரித்துள்ளபோது பெற்றோலிய கழிவாக கிடைக்கும் கேசை ஷேல் நிறுவனத்திற்கு விற்க வேண்டும். இது தேசத்தின் பொருளாதார பேரிழப்பு மட்டுமல்ல பொருளாதார பண்ணாட்டு நிறுவனங்களிடம் கையளிப்பதன் பாதகமான விளைவுகளில் ஒன்றுமாகும்.

மேலும் ஷெல்கேஸ் விலை அதிகரிப்புக்கு அந்நிறுவனம் கூறும் காரணங்கள் பல விசித்திரமானவை.

விலையேற்ற, அரசுடன் ஆராய்ந்த பின்னரே மேற்கொள்ளப்பட்டது. அரசும் கம்பனியும் பரஸ்பர புரிந்துணர்வு மூலமே இவ் விலையை உயர்த்தின.

பலதடவை விலை உயர்த்தப்படாமல் இருந்தமைக்கு காரணம் சமூக பொருளாதார காரணங்களாகும்.

வேறு நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் கேஸ்விலை குறைவுதான்.

99ம் ஆண்டு 30-40% விலை அதிகரிப்புக்கு வாய்ப்பிருந்தும் விலை அதிகரிக்கப்படவில்லை.

1999 ஜனவரி-மே நடுப்பகுதியில் சலத்தி-ஆரம்கோ ஒப்பந்தப்படி ஒரு மெற்றிக் தொன் வாயு 140 அமெரிக்க டொலராக இருந்தது. இது 2000 ஆண்டு சம காலத்தில் 280 அமெரிக்க டொலராக 100% அதிகரித்தது.

100% விலை அதிகரித்துள்ள போதும் இலங்கையில் 22% மட்டுமே உயர்த்தியுள்ளோம்.

ஷெல் நிறுவனமே உலகில் மிக குறைந்த விலைக்கு வாயுவை விற்பனை செய்கிறது.

இதுவரை ஒரு வீட்டு பாவனை சிலிண்டருக்கு 105/- மானியமாக வழங்கி வந்துள்ளது.

2000 ஆண்டு முதல் ஐந்து மாதத்தில் மட்டும் 50 கோடி ரூபா நட்டமேற்பட்டது.

உலக சந்தை விலைகளை இந்த விலை அதிகரிப்பு உண்மையில் பிரதிபலிக்கவில்லை.

உலக சந்தையில் எரிவாயு விலை குறைந்தாலும் இலங்கையில் விலை குறைப்பு சாத்தியமில்லை. ஏனெனில் கம்பனி நட்டத்தை ஈடுசெய்ய விலை உயர்வு அவசியம்.

ஷெல் நிறுவனம் புதிதாக நிறுவிய டேர்மினல்களுக்காக 34 இலட்சம் அமெரிக்க டொலர் கடனாக செலுத்த வேண்டியுள்ளது.

புதியடேர்மினல்களின் வருடாந்த செயற்பாட்டுச் செலவு ஒருகோடி ஒன்பது இலட்சம் அமெரிக்க டொலராகும். இதனைச் சமாளிக்க வேண்டும்.

புதியடேர்மினல்களின் வருடாந்த தேய்மானம் 60 இலட்சம் அமெரிக்க டாலர்களாகும்.

எனவே தனது விலை அதிகரிப்பு நியாயமானது என வாதிடுகிறது ஷெல் நிறுவனம்.

இங்கு அதிர்ச்சி தரும் விடயம் என்னவென்றால் இந்த பன்னாட்டு நிறுவனத்தின் தளத்தில் அரசு முற்றாக மூழ்கிப் போய் விட்டமை மட்டுமல்ல அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றுமே தெரியாத கிளிப்பிள்ளைகள் போல சனாதிபதியிடம் விலை குறைக்க கோரியுள்ளளோம், திரைசேரி விலை குறைக்க பேச்சு நடத்துகிறது. அமைச்சர்கள் எதிர்க்கிறார்கள் என்ற கபடத்தனமான அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருப்பது தான்.

இலாப மீட்டுவதை மட்டுமே இலக்காக கொண்ட பன்னாட்டு நிறுவனமே எரிவாயுவின் பொருளாதார உணர்வு தன்மையையும் சமூக பொருளாதார காரணங்களையும் கவனத்தில் கொண்டு தயக்கத்துடன் இந்த விலையேற்றத்தை செய்தோம். அதற்கு ஆரசின் பூரண உடன்பாடு இருந்தது என அறிவித்துள்ளபோது ஒவ்வொரு வீட்டு அடுப்பு மூலைக்கே வந்துவிட்ட ஒரு பொருளாதார அச்சுறுத்தல் பற்றி தெரியாத மடந்தைகளாக அமைச்சர்கள் இருக்க முடியாது. கனிவள அமைச்சர் இன்னொரு குட்டையும் உடைத்திருக்கிறார், ஆம் திரைசேரியுடன் நடக்கும் பேச்சு விலை குறைப்பு பற்றியல்ல கம்பனியின் நட்டத்தை மானியும் கொடுத்து தீர்க்கமுடியுமா என்றே பேசியிருக்கிறோம் என கூறுகிறார்.

எப்படியாவது இலங்கை மக்களின் வயிற்றில் அடி விழுவதைத் தடுக்கமுடியாத ஏஜென்சியாக அரசு வங்குரோத்து அடைந்துள்ளதையே இந்நிலைமை காட்டுகிறது.

ஏற்கனவே பெற்றோல், நிறுவனம். ஊழியர்களின் எண்ணிக்கை 112 பேரால் குறைத்துள்ளதோடு செயற்பாட்டு செலவுகளைக் குறைத்துள்ளது. 40% செலவு குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தீர்மானித்துள்ளது.

பன்னாட்டு கம்பனிகளுக்கு வக்காலத்து வாங்கும் அரசு மக்கள் மீது கரிசனை கொண்டதாக இருக்குமாயின் தற்போது விற்பனை விலைக்கு காரணமான பல்வேறு செலவுகளை குறைக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் விலையை பழைய நிலைமைகளுக்கு மாற்றியமைக்க முடியும்.

தற்போதைய விலைக்கான உள்ளீட்டு செலவுகள்

| | |
|---|---|
| உற்பத்தி விரயம் | 250.96 |
| கப்பல் கட்டணம் | 56.20 |
| வரியும் தேசிய பாதுகாப்பு நிதி | 34.59 |
| போக்குவரத்து | 101.25 |
| இலாபம் | 29.00 |
| | **470.00** |

மறுசீரமைப்புக்கான சாத்தியப்பாடு

| | |
|---|---|
| உற்பத்தி விரயம் | 250.96 |
| கப்பல் கட்டணம் | 54.20 |
| போக்குவரத்து செலவு | 50.60 |
| இலாபம்(1/3 x 29) | 9.66 |
| | **365.42** |

இதன்படி எரிவாயு தான் அரசவரி கட்டுப்பாட்டுக்களை முழுமையாக நீக்குவதன் மூலம் 34.59 சதத்தையும், போக்குவரத்து செலவுகளை 50% த்தால் குறைப்பதன் மூலமும் இலாபத்தை 1/3 பங்காக குறைப்பதன் மூலமும் விலையை 365.42 சதத்திற்கு கொண்டு வர முடியும்.

ஆனால் கம்பனியின் கடன்களை அடைக்கவும் தேய்மானத்தையும், செயற்பாட்டு செலவுகளையும் சமாளிக்கவும், நட்டத்தை ஈடு செய்யவும் அரசு முனைவதால் இன்னும் பன்மடங்கு கட்டண அதிகரிப்பு செய்ய வேண்டியிருக்கும்.

மின்சார கட்டணவுயர்வு, தொலைபேசிக் கட்டணவுயர்வு, குடிநீர் விநியோக கட்டணவுயர்வுகளுக்கு உள்நாட்டுப் போரை காரணம் காட்டும் அரசு, தேசிய இன முரண்பாட்டை வியாபாரப் பொருளாக்கியுத்த தளபாடங்களுக்காக அபிவிருத்திக்கான நிதியையும், வெட்டி குறைக்கும் அரசாங்கம் என்று தான் மக்களினதும், தொழிலாளர்களதும் ஒடுக்கப்படுகின்ற தமிழ் மக்களதும் பாதுகாவலன் என பிதற்றுவதில் எந்தவித தார்மீக நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை.

பன்னாட்டு நிறுவனங்களிடம் விலை போன ஆபிரிக்க, லத்தீன், அமெரிக்க நாடுகளினதும் ஆசியாவின், இந்தோனேசிய, மலேசிய பொருளாதாரங்களுக்கும் சமூகங்களுக்கும் மாதாந்த பெரும் சமூக பொருளாதார அழிவுகள் இலங்கையின் அனைத்து மக்களினதும் வீட்டு வாசலில் நிற்பதை கண்டு கொள்ள வேண்டும்.

பொ. பிரபாகரன்

7ம் பக்கத் தொடர்ச்சி...

## வளவ கங்கைக்கு தடுப்புச்சுவர் ....

நாளைக்கு 4 மணித்தியாலங்கள் மட்டுமே நீர் வழங்குவோம் என நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். இந்த நீர் காணாது என்று மக்கள் மனம் வெதும்பிய நிலையில் உள்ளனர். எந்த நேரத்தில் நீர் வழங்கப்படும் என்பது உறுதியில்லாததால் மக்கள் கண் விழித்திருக்க வேண்டிய நிலையில் இருக்கின்றனர். 4 மணித்தியாலத்திற்கு மேலாக யாரும் தண்ணீர் எடுக்க நினைத்தால் விவசாயிகளுக்கு இடையே பெரும் பிரச்சினை உருவாகும்.

இத்தகைய பிரச்சினைகளை பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்ததாக தெரியவில்லை. இவர்கள் உலக வங்கியின் திட்டத்தை தம்மால் ஒன்றுமே செய்யமுடியாது என்று அடம்பிடிக்கின்றனர்.

மேற்படி அதிகாரிகள் தண்ணீர் வழங்குவதற்கு மீற்றர் முறையை பாவிப்பது, கள்ள நோக்கத்துடன் ஆகும். மீற்றர் மூலம் தண்ணீர் கொடுத்தால், விவசாயிக்கு தண்ணீர் காணாமல் விரைவில் விவசாயத்தை கைவிடுவார். அல்லது, மீற்றர் மூலம் வழங்கப்படும் தண்ணீருக்கு பணம் கொடுக்க முடியாமல், போய்விடும். இதனால் தண்ணீர் விநியோகம் வெட்டப்படும். சுருக்கமாகச் சொல்லப்போனால், இவ்விவசாயிகளை இப்பிராந்தியத்தில் இருந்து வெளியேற்றுவதே அதிகாரிகளின் நோக்காக இருக்கிறது. தற்போது இலங்கையில் வளம்மிகு விவசாய நிலங்கள் அந்நிய கம்பனிகளுக்குத் தாரை வார்க்கப்படுகிறது. இதை மேலும் அதிகரிப்பதே அரசின் நோக்காக உள்ளது. வளவை பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் அபகரிக்கும் நடவடிக்கை புதிய பாணி அபகரிப்பு நடவடிக்கையாகும். இது வளவையில் முதன்முதலாக ஆரம்பிக்கப்படுகிறது.

எது எப்படி இருந்தாலும் வளவை பகுதியில் உள்ள 2000 விவசாய குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வரப்போகிறது. அவர்களுக்குரிய வருமான இழப்புக்கு எத்தகைய மாற்று நடவடிக்கையும், சம்பந்தப்பட்டவர்கள் எடுத்ததாக தெரியவில்லை. இப்பகுதியில் வாழும் பெருந்தொகையான விவசாய மக்களை எத்தகைய வருவாயும் அற்றவர்கள் ஆக்குவதற்கே பெரும் முயற்சி நடைபெறுகிறது. அத்துடன் சுற்றுப்புறச் சூழலுக்கும் பெரிய அபாயம் ஏற்படப் போகிறது. அந்நிய நிறுவனத்திற்கு நீர்வழங்குவதற்காகவே இம்முயற்சி எடுக்கப்படுகிறது. அந்நிய நிறுவனத்தினர் நடவடிக்கை எத்தகைய அழிவை இப்பகுதியில் உண்டு பண்ணப் போகிறதோ தெரியவில்லை. இந்நிலைமைகளுக்கு எதிராக வளவை மக்கள் என்ன செய்ய வேண்டும்? என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# புத்திஜீவிகளின் புத்தியீனங்கள் பாரீர்

## இலங்கையில் இனத்துவ நெருக்கடியின் பரிமாணங்கள் — மாநாடு

'இலங்கையில் இனத்துவ நெருக்கடியின் பரிமாணங்கள்" Dimensions of the Ethnic crisis in Sri Lanka) என்ற தலைப்பில் அண்மையில் 3 தினங்களாக ஒரு "தேசிய மாநாடு" பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டது. இம்மாநாடு இலங்கை விஞ்ஞான முன்னேற்றக்கழகத்தின் சமூக விஞ்ஞான பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (மாநாட்டிற்கான அழைப்புக் கடிதத்தில் விஞ்ஞன முன்னேற்றக் கழகத்தின் பரந்த தேசிய கடப்பாட்டின் ஒரு அங்கமாகவே இது நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருந்ததாவது 'பல்வேறு வடிவத்திலான கருத்துக்களை இந்த 3 நாள் மாநாட்டில் ஒரே மேடையில் வழங்க முடியும். இதனூடாக முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்பவர்கள் அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்களுக்கு இது தொடர்பாக பல்வகைப்பட்ட பிரச்சினைகளும் நுணுக்கமான பின்புலத்தினை வழங்க முடியுமென நம்பலாம். எனினும் இதில் தற்போதைய அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமான சம காலப் பிரச்சினைகள் ஆராயப்படமாட்டா. இருந்த போதிலும் இம்மாநாடு அதற்கு வேண்டிய சந்தர்ப்பத்தினை வழங்குவதாக அமையும். இந்த மாநாட்டில் பொதுமக்கள் கலந்து கொள்ளலாம். புத்திஜீவிகள், உயர் தொழில் வல்லுனர்கள், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்திலானவர்கள் இம் மாநாட்டில் பங்கு பற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என்றெல்லாம் அழைப்புக் கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

மாநாட்டு மண்டபத்தில் வழங்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின்படி பிரதானமாக (அ) மகாவம்சம், (ஆ) தமிழரின் பாரம்பரிய தாயகம், (இ) சிங்கள ஆணைக்குழுவும் அதன் தோற்றுவாயும், அதன் பிரதான விளக்கங்களும், (ஈ) புத்த பிக்குமாரின் பங்களிப்பும் அணுகுமுறையும், (உ) இனத்துவ நெருக்கடியின் சர்வதேச பரிணாமம் அடங்கலான பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. மாநாட்டில் சிங்கள ஆணைக்குழு, சிங்கள வீரவிதான, மற்றும் சிங்கள தீவிரவாத பிரிவினர் அதிகளவில் பங்குபற்றியிருந்தனர். மேஜர் ஜெனரல் ஆனந்த விரசேகர, பேராசிரியர் நலின் டீ சில்வா போன்ற பிரமுகர்களும் அங்கே வந்திருந்தனர்.

பேராதனை, களணி, ஸ்ரீ ஜயவர்தனபுர ஆகிய பல்கலைக்கழகங்களைச் சார்ந்த வரலாறு, சமூகவியல், புவியியல், பொருளாதார அபிவிருத்தி ஆகிய துறைகளைச் சார்ந்த பேராசிரியர்களும், இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் கே. எம். டி. சில்வா, கலாநிதி நலின் டி. சில்வா, சிங்கள ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி பியசேன திசாநாயக்க, வண. பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரர், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்ஹ பிரேமதாசவின் செயலாளர் கே. எச். ஜே. விஜயதாச, சூரியமல் சமாதான நிலையத்தின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, தொல்பொருள் திணைக்களத்தலைவர் சிரான் பண்டாரநாயக்க, இலங்கை விஞ்ஞான முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி சுசந்த குணத்திலகவும், மார்கா நிலையத்தைச் சேர்ந்த கலாநிதி தேவநேசன் நேசையாவும் உரையாற்றியிருந்தனர்.

இந்த மாநாட்டுக்கான நோக்கம் இலங்கையில் இனத்துவ நெருக்கடியின் பரிமாணங்கள் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் உண்மையில் தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்றொன்று அவசியமற்றது, அதிகாரப் பரவலாக்கல் என்பது அறவே தேவையற்றது, தமிழரின் பாரம்பரிய தாயகம் என்பது ஒரு கட்டுக்கதை என்ற பாணியிலேயே மாநாடு நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது. பண்டைய வரலாறுகள் பற்றி சிங்களவர்கள் முதன்மை பற்றியெல்லாம் பலரால் பேசப்பட்டதோடு, தமிழர்களுக்கு பிரச்சினையேதும் இருக்கிறதா என்று எத்தனையோ தடவைகள் கேட்டும் ஒரு பதிலும் இல்லையே என்று கலாநிதி பியசேன திசாநாயக்க கூறிவந்தார். இவ்வளவையும் செவிமடுத்தபின் நான் எனது கருத்துக்களைக் கூறினேன்.

அதாவது நித்திரை கொள்பவனை எழுப்பலாம். நித்திரை கொள்வது போல் பாசாங்கு பண்ணுபவனை எழுப்ப முடியாது. அதேபோல் கண்ணிருந்தும் பார்க்க முடியாதவர்கள் குருடரிலும் கெட்ட குருடர் என எனது உரையினை ஆரம்பித்து. மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டமை, தனிச்சிங்களம் அரச கரும மொழியாக்கியமை, வடக்கு கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டமை, பல்கலைக்கழக அனுமதியில் மொழிவாரியான தரப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டமை இவையெல்லாமே தமிழ் மக்களுக்கெதிரான பாரிய நடவடிக்கைகள் என்பது தெரியவில்லையா என்று நான் அடித்துக் கேட்டேன். இன்று ஒரு சிங்கள ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது தொடர்ந்து தமிழ் ஆணைக்குழு, முஸ்லிம் ஆணைக்குழு, பறங்கியர் ஆணைக்குழு அமைப்பதா? அப்படி இனரீதியாக கூறுபோடுவதுதான் உங்கள் தேவையா? என நான் கலாநிதி பியசேன திசாநாயக்காவிடம் கேட்டேன். அவருக்குப் பதிலாக அதற்கு பதிலளிக்க முன்வந்த கலாநிதி நலின் டீ சில்வா தனக்கே உரிய சிங்கள பௌத்த பேரினவாத பாணியில் இவற்றை நியாயப்படுத்த முன்வந்தார்.

வரலாறைப் பொறுத்த வரையில் பல வரலாற்றாசிரியர்கள் வெவ்வேறு வரலாறுகளை எழுதி யுள்ளனர். ஒன்றுக்கொன்று முரண்பாடான வரலாற்று நூல்களே இன்று காணப்படுகின்றன. இப்போதைய இந்த அமர்விலேயே பேராசிரியர் கே. என். ஓ. தர்மதாச, பேராசிரியர் லெங்கி குணவர்தன எழுதிய வரலாற்றில் தவறுகள் உள்ளன. அவர் நேர்மையற்றவர் என்றெல்லாம் கூறியுள்ளார். மக்களை முற்றாக குழப்பத்தில் ஆழ்த்தக்கூடிய வகையில் தான் வரலாற்றாசிரியர்கள் தமது முடிவுகளை வடித்துள்ளனர். எனவே தான் உணமையான வரலாறு எங்கே என்று நான் எழுப்பிய வினாவுக்கு தக்க பதில் கிடைக்கவில்லை. வரலாற்றாசிரியர்கள் தமது ஆராய்ச்சிகளின் மூலம் கண்டதை, தமக்குச் சரியெனப்பட்டதை வரைகின்றார்கள் என்ற பொருள்பட பேராசிரியர் கே. எம். டி. சில்வா போன்றோர் அளித்த பதில் அமைந்திருந்தது. மேலும் எது எப்படியிருப்பினும், பண்டைய வரலாற்றை மட்டும் பேசிக். கொண்டு, நவீன காலத்துக்குள் பிறவேசிக்காமல், சமகால யதார்த்தங்களைக் கணக்கில் எடுக்காமல் விட்டால், பேசிக் கொண்டேயிருக்கலாம். என்றும் பின்னேற்றங்களையே சந்தித்துக் கொண்டிருக்கலாம். இது எல்லா இனமக்களுக்கும் செய்யும் துரோகமாகும்.

### அதிகார பரவலாக்கலும் பிராந்திய வாதமும்

அதிகாரப்பரவலாக்கல் என்பது பிராந்தியவாதத்திற்கு வழி வகுக்கக்கூடியது. எனவே அது பொருளாதார வளர்ச்சிக்கு முற்றிலும் பாதகமானது என வாதிட்டார். முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் புத்ததாச ஹேவாவிதாரண. அதே நேரத்தில் திட்டமிட்ட பிராந்திய ரீதியான அபிவிருத்தி அன்றேல் தேசிய ரீதியிலான அபிவிருத்தி காணமுடியாது என்றும் அவர் கூறிவைத்தார். பின்பு உரையாற்றிய பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் பேராசிரியர் மத்தும பண்டார அதிகாரப் பரவலாக்கல் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆற்று வள அடிப்படையிலான அபிவிருத்தி என்ற கோட்பாட்டின் கீழ் 7 பிராந்தியங்களாக இலங்கையை வகுப்பதின் அவசியமேயொழிய அதிகாரப்பரவலாக்கல் அவசியமில்லை என்பது தான் அவர் முன்வைத்த வாதமாகும்.

இன்று எல்லா அதிகாரங்களும் எல்லா வசதி வாய்ப்புகளும் கொழும்பிலேயே குவிந்திருக்கின்றன. தென்பிராந்தியங்களிலும் அதிகாரமின்றி அபிவிருத்தியின்றி மக்கள் பின்தங்கியிருக்கின்றனரே. அதனாலேயே மக்கள் விடுதலை முன்னணியினர் (ஜே.வி.பி.) "கொலம்பட்ட கிரி அப்பட்ட கக்கரி" ( கொழும்புக்குப் பால், எங்களுக்குப் பச்சைத்தண்ணி") என்ற சுலோகத்தினை முன்வைத்து கிளர்ச்சி செய்தார்களே என்று நான் சுட்டிக்காட்டியதுடன், நாட்டின் இறைமையும் அரசியல் அதிகாரமும் எல்லா மக்களுக்கும் உரித்தானது. ஆகையால் அதிகாரம் பகிரப்பட வேண்டியது நியதி என எடுத்துரைத்தேன். இதன்பின் பேராசிரியர் மத்தும பண்டார கூறியதாவது : அப்படியென்றால் தற்போதுள்ள மாகாணசபைத் திட்டம் போதுமானது. அதற்கப்பால் செல்லக்கூடாது என்று கூறினார்.

### பண்டைக்கால வரலாறும் வீண் பெருமை பேசுதலும்

காலம் காலமாக நாம் பண்டைக்கால வரலாற்றைக் கிளறிக் கொண்டிருக்கிறோம். வீண் பெருமை பேசுகிறோம். யார் இந்த நாட்டில் முதன் முதலாக வாழ்ந்தது. யார் முதன் முதலாக காலடி வைத்தனர் என்ற சர்ச்சைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். இன்றைய உலகின் போக்கினை கணக்கில் எடுக்காமல் கிணற்றுத் தவளைகள் போல் நடந்து நாட்டை சின்னாபின்னமாக்குவதுதான் அன்றைய தேவையா? G. 7. என்றழைக்கப்படும் அபிவிருத்தியடைந்த நாடுகள் குழுவே (அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், இத்தாலி, ஜேர்மன்) முழு உலகத்தினதும் தலைவிதியை நிர்ணயிக்கின்றது என்று தெரியவில்லையா? இவற்றுக்கெல்லாம் சிகரமாக அமெரிக்க நாட்டுக்கு வயது ஐநூறுக்கும் குறைவு என்பது தெரியாதா? பல்தேசிய கம்பனிகள் நுழைந்து அரசாங்கத்தின் தனியார் மயக் கொள்கையின் கீழ் உமது நாட்டின் மிகப் பிரதானமான பொருளாதார சொத்து சுதந்திரங்கள் எல்லாவற்றையும் சுவீகரித்து உண்டு கொழுத்து மகிழ்கிறார்கள் என்பது தெரியவில்லையா? என்றெல்லாம் பல கேள்விகளை நான் எழுப்பினேன்.

### மாநாட்டில் உரையாற்ற வருகை தராதவர்கள்

அடுத்ததாக, மேற்படி மாநாட்டில் உரையாற்றவிருந்தவர்களென குறிப்பிட்டிருந்த பலர் வருகை தரவில்லை. அவர்களிற் சிலர் வருமாறு:- கலாநிதி சுமனசிறி வியனகே, திருமதி. சித்திரா விஜேசேகர, அவர்கள் இருவரும் சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கைக்கு எதிர் புதிராக உரையாற்றவிருந்தனர். கலாநிதி பிரதீப் ஜெகநாதன் (அனுராதபுரம் - கற்களை வரலாறும், அண்மைய உருவாக்கமும்), கலாநிதி ஜயதேவ உயங்கொட (தமிழரின் பாரம்பரிய தாயகமும் பிரிவினைவாதமும்), கலாநிதி ராதிகா குமாரசுவாமி (பாரம்பரிய தாயக விவாதமும், சமகாலப் பிரச்சினைகளுக்கு இன்று தேவைப்படும் தீர்வுகளும்), கலாநிதி ஏ. எம். அருட்பிரகாசம் (பாரம்பரிய தமிழ் தாயகம் - இலங்கை வரலாற்றில் மறைக்கப்பட்டுள்ள பக்கங்கள்), திரு. தயான் ஜயத்திலக்க (தமிழரின் பாரம்பரிய தாயகம்), பேராசிரியர் எஸ். பத்மநாதன் (யாழ்ப்பாண இராச்சியம்), கே. லோகநாதன் (திம்பு பேச்சுவார்த்தைகளின் போது இடம்பெற்ற பாரம்பரிய தாயகம் தொடர்பான விவாதங்கள்), றெஜி சிறிவர்த்தன (இனத்துவ கவர்ச்சி வாதத்துக்கெதிரான கூட்டணி), கலாநிதி குமாரி ஜயவர்த்தன (சிங்கள பேரினவாதத்தினை பக்குவமின்மையின் மூலவேர்கள்)

முன்னாள் கல்விப் பணிப்பாளரும், வரலாற்றுப் படைப்பாளருமாகிய ஜனாப் சமீம் மாநாட்டில் கந்தரோடை மற்றும் பூனகரியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் மூலம் தமிழர் பழம்பெரும் வரலாறு உறுதிப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டி உரை நிகழ்த்தினார். நேரப்பற்றாக்குறை எனக்காரணம் காட்டி அவரின் உரை இடையில் நிறுத்தப்பட்டது.

### சிங்கள பேரினவாதிகளின் மேடையா?

இந்த 3 நாள் மாநாடு இலங்கை விஞ்ஞான முன்னேற்ற கழகத்தின் (சமூக விஞ்ஞான பிரிவின் பேரின் கீழ். ஒழுங்கமைக்கப்பட்டதாயினும் சிங்கள அதி தீவிரவாத சக்திகளின் மேடையாகவே இது அமைந்திருந்தது என்பது கண்கூடு. இது திட்டமிட்டு நடாத்தப்பட்ட நாடகம் (Engineered, manipulated) என்பதே அறிவறிந்த வாதிகளின் அபிப்பிராயமாகும். அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்திய முதலாளித்துவ உலகமயமாக்கல், தனியார் மயமாக்கல், போன்ற நாசகார கொள்கைகளுக்கு எதிராக குரல் கொடுக்க முன்வராத பேராசியர்களும் புத்திஜீவிகளும் சிங்கள மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கின்றார்கள் என்பதுதான் இன்று தீவிரமாக அம்பலப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் சமாதானதாக, ஒற்றுமையாக வாழ விரும்பும் எல்லா இன மக்களையும் கூறுபோட அயராது உழைப்பவர்கள் என்பது ஓயாது அம்பலப்படுத்தப்பட வேண்டும். இதுதான் இடதுசாரிகளின் பாரிய பணியாகும்.

www.padippakam.com



சிறுகதை

# தடம்புரளும் வாழ்க்கை

ஞாயிறின் ஒளிக்கீற்றுக்கள் புவியை வாட்டசாட்டமாய் எரித்துக் கொண்டிருந்தது. எந்தவொரு அனுதாபமும் காட்டாமலே தன்பாட்டில் சூரியன் புவியை நோக்கி நெருப்பை அள்ளிவீசிக் கொண்டிருந்தான். ஏழைத் தொழிலாளிகளின் வியர்வையை நிலத்தில் சிந்தவைத்து வேடிக்கை பார்க்கும் ஒரு சுவைஞனாகவும் சூரியன் சிலவேளைகளில் மாறிவிடுவதுண்டு.

வழமைபோலவே சூரியனிலிருந்து நெருப்பு கசிந்து கொண்டிருந்த அன்று, காடுகளுக்குச் சென்று மிலாத்துக் கொள்ளிகளை உடைத்து கட்டி தலையில் தூக்கி வைத்துக் கொண்டு, தத்தம் வீடுநோக்கி விரைந்து கொண்டிருக்கும் பெண்கள் தொழிலாளர்களின் கூட்டம் அணிவகுத்துச் சென்று கொண்டிருந்தது. வெயிலின் அகோரத்தில் அவர்கள் புழுக்களாய் நெளிந்து ஒதுங்கிக் கொண்டிருந்தனர். தலைகளில் கனக்கும் கொள்ளிக்கட்டுகளுடன் ஒவ்வொருவரின் வாயிலிருந்தும் சொற்கள் சிதறிக் கொண்டு வந்தன.

''அடியே! பார்வதி, நீ எதுக்குடி இப்படிக் கஸ்டப்படுறாய்....? உனக்குத்தான் ஒரு ஆம்புளப் பொடியன் இருக்கான் தானே, அவன் உழைச்சி உனக்கு சோறு போட மாட்டானோ......?
எங்களுக்குத்தான் ஒரு ஆம்பளப் பையனில்ல..... அதுதான் நாங்கள் இப்புடிக் கஸ்டப்பட்டு உழைக்கிறம்..... நீ எதுக்கு.....'' பார்வதி ஆச்சியின் கிழத் தோழிகளில் ஒருத்தி வழமையாக அவள் கூறிவரும் அதே வார்த்தையை இப்போதும் கூறிக் கொட்டினாள். அவர்களின் அந்த வார்த்தைக்கு பார்வதி கொடுக்கும் ஒரே பதிலையே இப்போதும் சொல்ல வேண்டியதாயிற்று.

''ஆம்பளப் பொடியன் இருந்தா வேலை செய்யிறதுதான் அவன் கடமையா? ஏன் அவன் படிச்சி சமூகத்திலை முன்னுக்கு வரக்கூடாது?'' இன்று பார்வதியின் பதிலில் கோபமும் இரண்டறக் கலந்திருந்தது.

''அடிப்போடி,'இப்ப யாருடி படிச்சி வேல பாக்கான்..... சும்மா விட்டுட்டு....'' -பற்களால் அரைத்து கொடுப்புக்குள் பதுக்கி வைத்திருந்த வெற்றிலைச் சக்கையைத் துப்பிவிட்டு, கடைவாயினால் வலிந்து சென்ற சாற்றையும் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள் அவள். பார்வதி மீண்டும் பதிலிறுத்தாள். அவளின் அந்த பதிலில் கல்வி பற்றிய சில யதார்த்தக் கருத்துக்கள் இழையோடிக் கிடந்தன.

''படிக்கிறது வேல பாக்க மட்டுமில்லடி.... நல்லா வாழ்றதுக்கும்தான். மலையகத்துல வாழ்ற தமிழரான எங்கடை ஆக்களை படிக்க விடாம சில பேரினவாதிகள் தடுக்கினமாம். இதற்கு காரணம் தெரியுமா உங்களுக்கு..... ஒரு சமுதாயத்த அடக்க வேணுமுண்டா முதல்லை அதன் கல்வியை அடக்க வேணுமாம்....'' என்று பாமரப் பெண் பார்வதியின் பதிலில் படித்த பெண்ணின் பதிலின்.வாசனை வீசியது.

இப்படியே தொடர்ந்து கொண்டு போகும் அவர்களின் பேச்சுக்கு பார்வதியினுடைய குடிசையின் தரிசனமே முற்று வைக்கும்.

பார்வதி தன் குடிசை முற்றத்தில் தனது தலையில் வைத்திருந்த கொள்ளிக் கட்டை கடும்பிரயத்தனமெடுத்து இறக்கி விட்டாள். ''அம்மாடியோவ்.....'' கொள்ளிக்கட்டை இறக்கி தலைச் சுமையை குறைத்துவிட்டு இயல்பான அவளின் உடல்வலிகள் அவளை அநாயசமாய் ஆக்கிரமித்தது.

வாசலில் அரவம் கேட்டு குடிசைக்குள் படித்துக் கொண்டிருந்த அருள் வெளியே எட்டிப்பார்த்தான். அவன் அம்மாவின் வேதனை முனகலை வேதனையுடன் உள்வாங்கினான்.

''அம்மா, ஏனம்மா நீங்கள் இப்புடிக் கஸ்டப்படுறியள்? நான் வேலை செஞ்சி உங்களைக் காப்பாத்துவன் தானே! என்னையும் வேலை செய்ய விடுங்கோவன்'' எட்டிப் பார்த்த அருள் தனது வழமையான பல்லவிகளையே பாடிக் கொண்டு வெளிப்பட்டான்.

''நீ சும்மா போடா.... முதல்ல படிச்சி பிறகு என்னைக் காப்பாத்து என்ன?'' பார்வதி இந்த சொல்லின் மூலம் தான் அவனின் பேச்சைக் கட்டிப் போட்டு விடுவாள். பிறகு அவனுக்கு எதுவுமே பேசத் தோணாது. தாயின் கனவை நனவாக்கவே படிப்பில் மூழ்கிவிடுவான் அருள்.

இத்தனைக்கும் பார்வதியின் வேதனம் குடும்பச் செலவுக்குப் பற்றாது. உழைப்புக்கேற்ற ஊதியமில்லை. எனினும் அன்றன்றைக்கு வயிற்றைக் கழுவிக் கொள்ள சில சில்லறைகள் கிடைக்காமல் போகவில்லை.

பார்வதியின் அந்தத்தனியான வேதனத்திலேயே அருளுக்கும் படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. தாயின் கனவை நனவாக்க வேண்டுமென்ற ஆசையினாலும் தனது ஓய்வு நேரங்களைக் கூட படிப்பதற்கென்றே ஒதுக்கி விட்டிருந்தான்.

இப்போது அருள் க.பொ.த (சா/த) படித்துக் கொண்டிருக்கிறான். படிப்பதற்குக் கூட அவனின் வசிப்புச் சூழல் அவனுடன் ஒன்றிப் போகவில்லை. அவனின் கிராமத்தில் தினமும் வெடிச் சத்தங்களே முழங்கிக் கொண்டிருக்கும். தவிர சிறிய சிறிய லாம்பு வெளிச் சங்களே குடிசைக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் இருளை அகற்றிவிட உதவும். இரவில் நாய்களின் குரைப்பும், தவளைகளின் சங்கீதமும் காற்றோடு கலந்து காதுகளை இம்சைப்படுத்தும். அவர்களின் உயிருக்கு எந்நேரத்திலும் எதுவும் நடக்கலாம். என்ற பீதிக் கனல்கள் மனதில் எக்கச்சக்கமாய் படிந்து கிடக்கும். இப்படியான யுத்தயுகங்களின் கோரப்பசிக்குத் தீனியாகிப் போன ஒரு கிராமத்திலேதான் அருள் ஒரு மாணவனாகவிருந்தான்.

அருளின் அப்பாவும் பல ஆண்டுகளுக்கு முன் விறகு வெட்டப்போன போது காட்டில் வைத்தே இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்தக்கோர நினைவு இப்போதும் அருளின் நெஞ்சில் அடிக்கோடிட்டு நின்றது. அப்படியே ஈரமாக......

அந்தக்கோர நினைவினை அவன் மனதால் மீட்டிக் கொள்ளும் போது அவனின் கண்கள் நிரம்பி வடிந்து அவனின் கன்னத்தைக் காயப்படுத்திடும். அந்தக் கோர நினைவை அவன் மறக்க எத்தனித்தாலும் அது அவனால் முடியாது போய்விடும். அந்த சோகச் சுமை அவனை மட்டுமல்ல பார்வதியையும் தான் அழுக்கிவிட்டிருந்தது.

''அம்மா...., நீயும் அந்தக் காட்டுக்கு கொள்ளியெடுக்கப் போக வேணாம்மா.... அந்தக் காட்டிலைதானே என்ரை அப்பாவையும் சுட்டவையள்......'' அருள் இப்படித்தான் தன் அம்மாவிடம் அவனின் அப்பாவின் ஞாபக முடிச்சுக்கள் மனதுக்குள் அறுந்து விழும்போது புலம்புவான்.

அருளின் அந்தப் புலம்பலைக் கேட்கும் போதெல்லாம் பார்வதியின் மனம் புண்ணாகிப் போகும்.

அன்று சூரியன் வானத்தை மேய்ந்து கொண்டு மேற்குப்பக்கமாய் சரிந்து விட்டிருந்த நாழிகை.

ஒவ்வொரு குடிசைகளுக்குள்ளும் அத்துமீறிப் பிரவேசிக்க முனைந்த இருளை விளக்கேற்றி விரட்டி விட்டனர். அருள் குடிசைக்குள் குமுறிக் கொண்டிருந்த விளக்கையே வெறித்தபடி இருந்தான். இப்போது எரிந்து கொண்டிருப்பது விளக்குமட்டுமல்ல அருளின் உள்ளமும்தான்.

திரியில் நேராக அடாமல் அசையாமல் நின்ற நெருப்பு காற்றின் ஆலிங்கனத்தால் அணைந்து விடாமலிருக்க அங்கு மிங்குமாகத் திரும்பித் திரும்பி நாட்டியமாடிற்று. நாட்டியக்காரியின் நளின அசைவுகளைப் போல இருந்தது அந்தத் திரியில் சுடரும் நெருப்பின் அசைவு. அந்த விளக்கொளியில் அவன் திரும்பும் திசைக்கெல்லாம் அவனின் நிழல் தெறித்துக் கிடந்தது. அந்த நிழல்களிலெல்லாம் அவனின் அப்பாவின் விம்பமே அவனின் மனக் கண்களுக்குள் நிறைந்தது. அப்போதெல்லாம் அவன் மனதுக்குள் மானசீகமாய் அழுதான். இப்படித்தான் அருளினதும், அவன் அம்மாவினதும் வானாட்களின் ஒவ்வொரு கணங்களும் கரைந்து கொண்டிருந்தன.

இதோ- மீண்டும் அருளின் நினைவலைகள் அவனின் அப்பாவை நோக்கி விசாலிக்கின்றன. அந்தக் கோர நினைவு அப்படியே நிழலாடுகின்றது அவனின் மனத்திரையில்.....

''கொள்ளியெடுக்கப் போக வேணாம் என்று சொல்லிப்புட்டானுகள் பார்வதி'' அருளின் அப்பா அநாயாசமாய் அலுத்துக் கொண்டார்.

''ஓமோம்! இனி எப்படித்தான் வாழப் போறோமோ தெரியல... எல்லாத்துக்கும் இந்தப் பிரச்சினைதான் காரணம்'' என்றவள் மேலும் தொடர்ந்தாள்.

''அருளுக்கும் கொப்பி, புத்தகங்களெல்லாம் வாங்க வேணுமாம் என்ன செய்யிறதென்னே தெரியலையே'' என்று பார்வதி மனம் நோகக் குழைந்தாள்.

''இல்ல பார்வதி நாங்களும் எத்தனை நாளைக்கு கஸ்டப்படுறது. அவங்களும் போக வேணாமுன்னு சொல்லுறதுதான்; நாங்களும் போறதுதான்.பிறகு எங்க ளாலை என்னதான் செய்ய முடியும்?'' - அருளின் அப்பா தன் மனப்போக்கை அங்கு சிலாகித்தார்.

''எதுக்கும் பொறுத்துப் பாருங்கோ.... பின்ன ஏதும் பிரச்சினையென்று வந்துட்டா.....'' பார்வதி அச்சத்துடன் வார்த்தைகளை இழுத்து முடித்தாள்.

''அதவிடு, பார்வதி நீ எல்லாத்துக்குமே இப்படித்தான பயந்து தான் விழுவாய். அதை நான் பாத்திக்கிறேனே'' அருளின் அப்பா பார்வதியின் பயங்கள் அர்த்தமற்றவை என முத்திரை குத்தினார்.

அதன் பிறகு இரண்டு நாட்களின் பின்னர் தான் அருளின் அப்பா விறகுக்குச் செல்ல வேண்டிய துரதிஸ்ட நிலைக்குத் தள்ளப்பட்டார். தன் மனைவி, மகன் அனைவரினதும் தடைகளையெல்லாம் தகர்த்துக் கொண்டு அன்று காலையில் வண்டிலில் ஏறி விறகுக்குப் புறப்பட்டார்.

அவர்கள் விறகுக்குச் சென்று சுமார் 3 மணித்தியாலங்களே சென்றிருக்கும். அதற்குள் அப்பக்கமாக ஆதுரப்பட்டெழுந்தன வெடியோசைகள். வெடியோசைகள் ஒவ்வொன்றும் கிராமத்திலுள்ளவர்களுக்கு இடியோசையாய் இறங்கிற்று.

''கடவுளே, அவரும் போனவரு என்ன தான் நடக்குதோ?''- வேதனையின் வெளிப்பாடு முகத்தில் அப்பட்டமாய் படிய பீதி பார்வதியின் மனதில் கால் நீட்டி உட்கார்ந்து கொண்டது. கிராமமுமே அல்லோல கல்லோலப்பட்டுக் கிடந்தது. சற்றைக்கெல்லாம் காட்டுப் பக்கமிருந்து வண்டிகள் ஒன்றிரண்டு வரத் தொடங்கின. ஏனைய வண்டிகளின் நிலவரம் குறித்து அறியும் வேட்கை கிராமத்தவர் மனதில் கரை புரண்டது.

வண்டிக்காரன் ஒருவன் வாய் கிழியக் கதறிக் கொண்டு ஓடி வந்தான்.

''சுட்டுப் போட்டானுவோள்; எல்லாரையும் சுட்டுப் போட்டானுவள்'' அவனின் கதறல் ஒலியுடன் சேர்ந்து கிராமமும் அப்போது அழுதது.

பார்வதி பெருத்த அழுகையுடன் வண்டிலில் கிடத்தப்பட்டிருந்த தன் கணவனின் முகத்தை உற்று நோக்கினாள். உடனே அவள் மூர்ச்சையானாள். அருள் அப்பாவின் மீது விழுந்தடித்து அழுதான். கதறினான். மேலும் அழத் திராணியற்றுப் போகும் வரை அழுது பிரலாபித்தான்.

அவன் அப்போது அப்படி அவ்விடத்தில் அழுத அழுகை இப்போது அவனின் அப்பா பற்றிய நினைவலைகளின் விசாலிப்பைச் சுருக்கிற்று. இப்போது அப்பாவின் நினைவுலகிலிருந்து தடுக்குப்பட்டு நிஜத்தில் வந்து விழுந்தான் அருள். காலநதி அமைதியற்றுக் கிடந்தது. பெரும்புயலின் பிரயத்தனத்தால் அதுமேலும் அமைதி குழம்பி அலை எடுத்து ஓட ஆரம்பித்தது. அதன் வேகச் சுழற்சிக்கு மனிதரும் அவர்தம் வாழ்வும் ஈடுகொடுத்தோடின.

இப்படித்தான் ஐந்து வருடங்கள் காற்றில் சிக்கி தூசாய்ப் பிரிந்து, பஞ்சாய்ப் பறந்து மறைந்துவிட்டிருந்தது.

அருள் இப்போது பல்கலைக்கழகம் சென்று படிக்குமளவுக்கு தகுதி பெற்று தன் அன்னையின் பகீரதப் பிரயத்தனத்திலும், அவனின் முயற்சியினாலும் பேராதனிய பல்கலைக் கழகத்தில் கற்றுக் கொண்டிருந்தான்.

அவனின் ஊரில் இப்போதெல்லாம் அம்மா தனியளாய் குடிசையினுள் முடங்கிக் கிடந்தாள். தன் மகனும் இல்லாத குறைக்கு இப்போது அவளுக்கு நாளுக்கு நாள் கவலைகள் பெருகிக் கொண்டே போயின.

''அடச்சனியனே உன்ரை மகன் படிக்கத்தானே போயிருக்கான். அவன் வந்து உன்னைக் காப்பாத்துவான் தானே..... பிறகு நீ ஏன் கவலப்படுற...?'' என்று

(தொடர்ச்சி பக்கம் 11...)

www.padippakam.com



10ம் பக்கத் தொடர்ச்சி

# தடம்புரளும் வாழ்க்கை

அவளே தன் மனதைத் தேற்றிக் கொள்ளும் சந்தர்ப்பம் இப்போதெல்லாம் அவளுக்கு அதிகமாகவே வந்தது.

அன்று இரவும் அவள் வழமைபோல் முற்றத்தில் இருந்தபடி வெற்றிலை, பாக்குகளையெல்லாம் தன் உரலில் போட்டு இடித்து மென்று கொண்டிருந்தாள். சலனமற்ற ஒரு நிசப்தப் பொழுதாகவே பெரும்பாலும் அது இருந்தது. அப்போது, அவள் யாருமே எதிர்பாராத விதமாகவே அது நடந்தது. தீ நாக்கொன்று அவள் முற்றத்தில் வந்து விழுந்து வெடித்துச் சிதறியது. பின் சரமாரியான துப்பாக்கி வேட்டுகளும், ஹெல்களும் இரு தரப்பினரிடையேயும் பரிமாற்றம் செய்யப்பட்டன. நொடிப் பொழுதில் உருவான கலவரத்தில் கிராமமே சிக்குண்டு தவித்தது. போர் முழக்கங்கள் முழங்கி முழங்கி ஓய்ந்தபடி இருந்தன. ஷெல்கள் வந்து வெடித்துச்சிதரும் ஒலி - ஒளிகள் கிராமத்தை முழுமையாக முற்றுகையிட்டது. சுமார் 30 நிமிடங்களின் யுத்தக் கொடூரத்தினால் கிராமம் முழுவதுமே சிதைந்து தான் போயிற்று. இப்போது மெல்ல மெல்ல வெடியோசைகள் தணிந்து கொண்டு போவதான பிரமை. போர் முழக்கங்கள் முற்றாகத் தணிந்ததுமே கிராமம் இரத்தக் களரியில் தான் தத்தளித்தது. உயிரற்ற மனித உடல்களே ஏராளமாகக் கிடந்தன. அரைகுறை உயிரிலும் சில மாந்தர் வழக்கப்படி அம்மா எனும் குரலெழுப்பி மாய்ந்தனர்- மாண்டனர். இப்படித்தான் அந்தக் கிராமம் எதிர்பாராத விபத்தில் சிக்குண்டு சிதைந்து போய்க் கிடந்தது. இப்போது கிராமமெங்கும் மயான அமைதி குடி கொண்டிருந்தது.

ஆபத்தின்றி எஞ்சியவர்கள் உயிர் நீத்தவர்களின் சமாதிகளை தூக்கி ஒரு புறமாய் வைத்துக் கொண்டு வந்தனர். அந்த உயிர் நீத்தார் வரிசையில் தன் கணவனின் இழப்பின் துயரத்தை மனதிலிருந்து இழந்தவளாகவும், தன் மகன் பற்றிய கனவுகளால் மனதில் கட்டியிருந்த கனவுக் கோட்டை உடைந்து நொறுங்கிக் கிடக்கக் காணாதவளாய் பார்வதியம்மாள் நிம்மதியான தூக்கத்தில் தன்னைத் தொலைத்திருந்தாள். ஆம்! பார்வதி பலியாகித்தான் போயிட்டாள்.

இந்தக் கொடூர நிகழ்வு கிராமத்தில் நடந்தேறி பத்து நாட்கள் பறந்து விட்டன. இன்றுதான் அருள் தன் பழைய சினேகிதனின் கடிதம் மூலமாக ஊர் நிலவரம் பற்றி அறிந்து கொண்டான். அதில் தன் தாயின் இழப்பு பற்றியும் அறிந்தான். அந்த இழப்புச் செய்தியை அவன் அறிந்து கொண்ட போது நீரிலிருந்து கரையில் எடுத்துப் போடப்பட்ட மீனைப் போல வேதனையில் அவன் மனம் துள்ளியது. அவன் அழுத அழுகையில் கடிதம் நனைந்து அதில் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துக்களும் அழிந்து போயிற்று. அந்த இடிச் செய்தியினால் அவன் சித்தம் கலங்கி இருந்தான். அவனால் நிதானமாக எதையுமே செய்ய முடியவில்லை. அவசரம் அவசரமாக யாரிடமும் சொல்லாமலே தன் ஊர் திரும்புவதற்காக அருள் ஓடிப்போய் பஸ்நிலையத்தையடைந்திருந்தான். வயிறு முழுவதுமே நிரம்பி இருந்த பேரூந்தொன்றில் அருளும் தொற்றிக் கொண்டான். பேரூந்து உறுமிக் கொண்டு புறப்பட்டது.

சுமார் இரண்டு மணி நேரப்பயணத்தின் பின்....

இடையில், சோதனைச் சாவடியொன்று அவர்கள் பயணித்த பேரூந்தை தடுத்து நிறுத்தியது. அப்போதுதான் அருளுக்கு துயரத்தினூடேயும் நிதானம் சற்று வெளித்தது. அவன் அவசரத்தில் தன் ''மணி பேர்ஸ்'' ஐ எடுக்க மறந்து விட்டான். அதற்குள் தான் அவனின் அடையாள அட்டையும் இருந்தது. இப்போது அவனை ஒரு நிரபராதியாக நிரூபிக்கக்கூடிய ஆவணங்கள் எதுவுமே கையில் அற்றவனாய்த் தவித்தான். வீட்டிலிருந்து கடை வீதிக்குப் போக வேண்டுமென்றாலும் அடையாள அட்டை தேவைப்படும் இந்த யுகத்தில் அவனால் எப்படி அடையாள அட்டை இன்றி பல ஊர் கடந்து செல்ல முடியும்?

சிங்களமும் சரியாகத் தெரியாத கனலில் அவன் மனம் எகிறித் தீய்ந்தது. மற்றுமொரு பொறியில் வசமாக வந்து மாட்டிக் கொண்டு விட்டதாக, அம்மாவின் இறப்பு வேதனையிலும் அவன் மனம் சல்லாபித்தது.

இப்போது அருள் நடுநடுங்கியவனாகவும், பயத்தில் உறைந்து போய் முக வெளிற்றத்துடனும் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸ்காரனிடம் சென்றான். அவனிடம் என்ன சொல்வதென்றே அருளுக்குப் புரியவில்லை.

''அயிடின் டி தியனவ் த?'' என்றான் பொலிஸ்காரன் கடுப்பாக. '''அயிடிண்டி....'' என்ன சொல்வதென்றே புரியாதவனாய் தலையைச் சொறிந்து கொண்டு கீழே வெறித்தான் அருள்.

''ஏய்! அயிடிண்டி நெத்த? ஏயாகவுத?'' -அவன் அருளுக்குப் புரியாத மொழியில் இன்னும் ஏதேதோ சொல்லி அவனை துளைத்தான். அதனைப் புரிந்து கொள்ளாது அருள் தவித்தான். அருளை அவ்விடத்திலேயே ''கொட்டியா'' என சீல் குத்தி விட்டான் அந்தப் பொலீஸ்காரன்.

அவன் திரும்பி இரண்டு பொலிஸ்காரரிடம் சிங்களத்தில் ஏதோ சொல்ல, அவர்கள் இருவரும் வந்து அருளை ஒரு குற்றவாளியைப் போல பிடித்திழுத்தார்கள். அருள் தனக்கு என்ன நடக்கப் போகிறது என்பதைப் புரிந்து கொண்டான். போலும் திமிறினான் முரண்டு பிடித்தான் அழுதான்.

''ஐயா..... என்னை விடுங்கைய்யா..... நான் நீங்கள் நினைக்கிற மாதிரி ஆளில்லைய்யா..... என்னை விடுங்கைய்யா.... நான் நிரபராதி...... நிரபராதி.....'' தட்டுத்தடுமாறி அழுது குளறினான்.

''அடோ.... நிக்கான் வரெங்....'' என்றபடி பின்னால் வந்த ஒருவன் துப்பாக்கிப் புடங்கினால் அருளின் முதுகில் ஓங்கி அடித்தான்.

''ஐயோ....... அம்மா.......'' இதோ அருளின் அழுகை அந்த இடமெங்கும் எதிரொலிக்கிறது. ஒரு நிரபராதியின் அழுகுரலைப் போல, இனி அவனுக்கு எந்த யுகத்தில் விடுதலையின் நிகழ்வு பிறக்குமென்பது யாருக்குமே புரியவில்லை. இப்படித்தான் எதிர்பாராத விதமாக மாந்தர் வாழ்க்கைகள் தடம் புரண்டு போகின்றன. யுத்தயுகங்கள் மாறுமட்டும் வாழ்க்கைச் சாலையில் எதிர்பாராமல் நிகழும் விபத்துகள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டு தானிருக்குமென்பதை மறுதலிக்க முடியாமல் போயிற்று.

# கேள்விக்குறியாகும் சிறுவர்கள் வாழ்வு

உலகம் இன்று மிக மோசமான சூழ்நிலையில் உள்ளது 50க்கும் மேற்பட்ட நாடுகளில் யுத்தம் நடைபெறுகின்றது. வறுமை பஞ்சம் என்று மக்கள் வாடி மடிகின்றனர். இந்நிலையில் சிறுவர்களின் எதிர்காலம் சூன்யமாகவே உள்ளது. கல்வியை உயிராக கொள்ள வேண்டிய சிறுவர் சமுதாயம் தமது வாழ்வை வளம்படுத்த எத்தனையோ விடயங்களை அறிய வேண்டி இப்பிஞ்சுகள் யுத்த கோரப்பிடிக்குள்ளும் பாலியல் வல்லுறவுகளுக்கும் பலியாக வேண்டியுள்ளது. அண்மைக்காலமாக இந்நிலை மோசமடைந்தே உள்ளது.

சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு பல்வேறு சட்டங்களையும் பிரகடனங்களையும் நாளாந்தம் பிரகடனப்படுத்தினாலும் அதனால் என்ன பயன் விளையப்போகிறது? ஐ. நா. சபையின் சிறுவர்கள் உரிமைகள் பற்றிய சமுதாயத்தின் உறுப்புரிமைகள் அனைத்தும் ஏட்டுச் சுரக்காயாகவே உள்ளது.

உலகில் இன்று யுத்த மேகமே சூழ்ந்துள்ளது. இதனால் போரில் குழந்தைகளை ஈடுபடுத்தும் போக்கே அதிகரித்துள்ளது. அண்மையில் உலக கூட்டமைப்பின் கணிப்பீட்டின் படி உலகில் மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட சிறார்கள் யுத்த நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கிறது.

குழந்தைகளைப் போரில் ஈடுபடுத்தும் போக்கு, ஆபிரிக்க ஆசிய நாடுகளிலே அதிகரித்து வருவதாக ஒரு ஆய்வில் தெரிய வந்துள்ளது. ஆபிரிக்க ஆசிய நாடுகளில் அரசும் தீவிரவாத அமைப்புகளும் போட்டி போட்டுக் கொண்டு சிறுவர்களை போராளிகளாக உருவாக்கி விடுகின்றனர். ஆபிரிக்காவில் மட்டும் 12,000, 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் போரில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

சிறுவர்களை யுத்த நடவடிக்கையில் ஈடுபடுத்துவது அதனை யுத்தகால குற்றமாக வகைப்படுத்தும் போரும் அமைப்புகள் பல சர்வதேச அளவில் செயல்பட்டு வருகின்றன. இருந்தும் குழந்தைகளை போரில் ஈடுபடுத்தும் போக்கு ஆபிரிக்க ஆசிய நாடுகளில் அதிகரித்து வருவதாக ஒரு ஆய்வில் தெரிய வந்துள்ளது. ஆபிரிக்க ஆசிய நாடுகளில் அரசும், தீவிரவாத அமைப்பும் போட்டி போட்டுக் கொண்டு குழந்தைப் போராளிகளை உருவாக்கி வருகின்றன. குழந்தைப் போராளிகள் அனைவரும் அனைவரிடம் முதல் நிலை போரில் ஈடுபடுத்தாவிட்டாலும் கூட பல குழந்தைகள் போரை பற்றி புரிந்து கொள்ள இயலாத நிலையிலே போராடி மடிகிறார்கள்.

யுத்தம் சிறுவர்களுக்கு ஏற்படுத்தும் பாதிப்பை தடுக்க வேண்டுமானால் யுத்தத்தில் சம்பந்தப்பட்டுள்ள இரு தரப்பினரும் அது பற்றி சிந்திக்க வேண்டும். சிறுவர் பாதுகாப்பு நோர்வே நாட்டை சேர்ந்த இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க்ஸ் அக்ஸ்ன்ட் வலியுறுத்தியுள்ளார்.

இன்று வடக்கு கிழக்கு பகுதிகளில் நடைபெறும் யுத்தம் காரணமாக இது வரையில் 58,000 பேர் உயிர் இழப்பதாகவும், 270,000 பிள்ளைகள் இடம் பெயர்ந்திருப்பதாகவும், அதனால் யுத்தத்தில் இரண்டு தரப்பினரும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான ஐ. நா. சாசனத்தை சிறந்த வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் இரண்டு தசாப்தங்களாக நடைபெறும் போரினால் எமது நாட்டின் சிறுவர்களின் மனநிலை, மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. போரினால் காயமடைந்த அல்லது உயிரிழந்த படைவீரர்களின் பிள்ளைகளும் போரில் சிக்கி உயிரிழந்த பெற்றோர்களின் பிள்ளைகளும் வறுமையில் கல்வி கற்க முடியாமல் தொழில் நாடிச் செல்கின்றனர். இச்சிறுவர்கள் பாலியல் வல்லுறவுகளுக்கும் பாதாள உலக கோஷ்டியினர், போதைப் பொருட்கடத்தலுக்கும், விற்பனைக்கும் பயன்படுத்தப்படுகின்றனர். இவர்களில் அனேகர் யுத்த நடவடிக்கைகளிலும் பயன்படுத்தப்படுகின்றனர்.

குழந்தைகள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்குதல் இன்று உலகம் முழுவதும் நடக்கும் விடயமாகும். இதற்காக வளர்முக நாடுகளில் வளர்ச்சி பெற்ற நாடுகள், என்ற பேதம் கிடையாது. திட்டமிட்ட முறையில் நுணுக்கமாக இந்த கலாச்சார வியாபாரம் நடைபெறுகின்றது. அண்மைய ஆய்வுகளின் படி 8 வயது தொடக்கம் 13 வயது அல்லது 13 வயது தொடக்கம் 18 வயது வரை உள்ள பெண் பிள்ளைகள் பாதுகாப்பு அற்றவர்களாக உள்ளதுடன் பாலியல் ரீதியான அச்சுறுத்தலுக்குள் வாழ்கின்றனர். இவர்களால் எதிர்த்து போராடக்கூடிய பலமும் இல்லாது இருக்கின்றது. பாடசாலை செல்லும் ஆண்பிள்ளைகள் கூட சொற்ப சந்தோஷத்துக்காக பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு எதிராக வலிமையான சட்டங்கள் இருந்தும் நடைமுறைக்கு அது சாத்தியப்படாது. இந்த துர்பாக்கிய நிலையில் இருந்து மீட்க வேண்டுமெனின் முதலில் அவர்களின் வறுமையைப் போக்க வேண்டும். சிறுவர்கள் மீது குற்றவியல் தீங்குகள் செய்வோர் மீது கடுமையான தண்டனை வழங்க வேண்டும்.

உலகில் 14 வயதுக்குட்பட்ட 40,000,000 சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்பட்டு பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர் என்று உலக சுகாதார நிறுவனத்தின் மதிப்பீடு கூறுகிறது.

உதாரணமாக பாலியல் வல்லுறவுக்குள்ளாகி கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்ற 20,000,0000 சிறுவர்களைப் பராமரிக்க ஆண்டொன்றுக்கு 12.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகிறது.

இன்று உலகில் போதைப் பொருள் பாவனை அதிகரித்து உள்ளது. அதிக இலாபம் தேடும் தொழிலாக இன்று விளங்கியது. பாதாள உலக கோஷ்டியினர் தமது போதைப் பொருள் கடத்தலுக்கும் விற்பனைக்கும் இன்று சிறுவர்களைப் பயன்படுத்தி விடுகின்றனர். வறுமையும், குடும்ப சூழ்நிலையும் சிறுவர்களை சிட்டு ஒளிந்தோடி போதைப் பொருள் விற்பனைகளில் கைக்குள் சிக்கி போதைப்பொருள் பாவனைக்கு உள்ளாகி வருகின்றனர்.

இன்று இலங்கையில் 20 வருட காலமாக தொடரும் யுத்த கெடுபிடிக்குள் வடக்கு கிழக்கில் 60,000 குழந்தைகள் கல்வியை இழந்து வாழ்கின்றனர். 20000 மேற்பட்ட சிறார்கள் தொழில் நிலைமை தோன்றியுள்ளது. நமது காதுகளில் யுத்த செய்திகளே ஒலிப்பதால் சிறுவர்களின் வாழ்க்கை நிலை எவ்வளவு தூரம் அமுங்கிப் போயுள்ளது என்பதை சிந்திக்க தவறி விட்டோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 10,000க்கு மேற்பட்ட சிறுவர்கள் தமது குடும்பங்களை காப்பாற்ற தொழில் செய்கின்றனர். இச் சிறுவர்கள் பெரும்பாலும் வாழைச்சேனை, பதிவரதவாவி, கல்குடா போன்ற பகுதிகளைச் சேர்ந்த சிறுவர்களே. அதிகம். சிறுவர்களைத் தொழிலுக்கு விற்றிருப்பதால் பல்வேறு நன்மைகள் உண்டு. பயமுறுத்தி வேலை வாங்கலாம். சம்பள குறைவு உணவு உடை போன்றவற்றிலும் அனாதாரவான நிலைமையில் 7218 குழந்தைகள் உள்ளனர். கூலி வேலைகளில் 1465 குழந்தைகள் ஈடுபட்டுள்ளதாக வறுமை காரணமாக கல்வி இழந்து சொந்த வீட்டிலே 1367 சிறுவர்கள் தொழில் செய்வதாகவும் அறியப்படுகிறது. தமது குடும்ப வருமானத்தை அதிகரிப்பதற்காக பாடசாலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக தெரியவருகிறது . இது இலங்கையில் மட்டும் அல்ல தென் ஆசிய நாடுகளில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்துவது பொதுவான பிரச்சினையாக உள்ளது.

நாளைய சமுதாயத்தில் சிறுவர்கள் சாய்ந்து போகாமல் பாதுகாப்பது எல்லோராலும் கடமையாகும்.

www.padippakam.com

புதிய சமதர்மம்

Registered as a news pap[...] in Sri Lanka



வாசகர்களே!
உங்களிடமிருந்து கருத்துக்கள், விமர்சனங்கள்,
ஆலோசனைகள், ஆக்கங்கள் என்வற்றை வரவேற்கிறோம்.
தொடர்புகட்கு
ஆசிரியர்
புதிய சமதர்மம்
143/3, கியு வீதி, கொழும்பு-02
தொலைபேசி:, 430621, 305329 தொலைமடல் : 334822

# இடதுசாரிகள் ஐக்கியம்

நாடு இருளில் மூழ்கிக் கிடக்கிறது தனது சொந்த நாட்டு மக்கள் மீது யுத்தம் செய்யும் கொடுமை இங்கே தான் நடைபெறுகிறது. தமிழ்தேசிய இன எழுச்சி புதிய வடிவம் பெறுவதைப் பொறுக்க முடியாத வலதுசாரிக் கட்சிகள் ஒன்றிணைகின்றன. பொது ஜன முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் நெருங்கி வருகின்றன.

அரசுடன் இணைந்து இருக்கும் இடதுசாரிகள் மேலும் அரசுடன் இறுக்கமாக தமது உறவை பலப்படுத்துகின்றனர். தனியார் மயமாக்கலால் தொழிலாளர்கள் கொந்தழித்துக் கொண்டு இருக்கின்றனர். விலைவாசி உயர்வால் ஏழை மக்கள் பல்வேறு வழிகளில் தமது எதிர்ப்புகளை தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர். இத்தகைய கால கட்டத்தில் மூன்றாவது சக்தியாக இடதுசாரிக் கட்சிகள் அணிதிரள்வது அவசியமானதாகும்.


மக்கள் விடுதலை முன்னனியினர் தேர்தல் வேலைகளில் மிகக் கடுமையாக ஈடுபட்டு வருகின்றனர். தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கும் அவர்களிடம் பதில் இல்லை. தொழிலாள வர்க்கத்தின் உணர்வுக்கும் அவர்கள் மதிப்பளிக்கவில்லை. இனவாத சக்திகளைத் திருப்தி பண்ணும் விதத்தில் அறிக்கைகளை விடுகின்றனர். தோழர் வாசுதேவ நாணயக்கார புத்தாயிரம் ஆண்டு இடதுசாரி கோமாளியாக காட்சி தருகின்றார். 1994ல் சந்திரிக்கா சகலவற்றையும் நிறைவேற்றுவார் என்று கூறிக் கொண்டு சொந்தக் கட்சியை தூக்கி எறிந்துவிட்டு சந்திரிகாவோடு இணைந்தார். தற்போது சந்திரிகா கூடாதவர் என்று வெளியேறினார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக நிற்கும்படி வாசுவை அனேக இடதுசாரி கட்சிகள் வேண்டுகோள் விடுத்து இருந்தும் அதை அவர் ஏற்கவில்லை. பின்பு சில உதிரிகளுடன் இணைந்து அரசியலில் தற்கொலைக்கொப்பான வாக்குகளை பெற்று இருந்தார். சந்திரிகா அரசு பத்திரிகைகள் மீதும் அரசியல் கட்சிகள் மீதும் விடுத்திருந்த தடை உத்தரவுகளை மீறி போராட வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டபோது அதையும் அவர் ஏற்கவில்லை. மாறாக நவ சமசமாஜக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியுமே சந்திரிகா விதித்த சட்டத்துக்கு எதிராக போராடின.

தற்போது இடதுசாரிகளை ஐக்கியப்படுமாறும் பொது அமைப்பை கட்டுவதற்கு வருமாறும் வாசுதேவா அழைப்பு விடுத்திருக்கிறார். தேர்தல் நெருங்குவதால், வாசுதேவா தனது ஆசனத்தை காப்பாற்ற தயாராகிறாரா? இடதுசாரி அரசிலைப் பொறுத்தவரை வாசு கடற்கரையில் இருக்கும் கருவாடே. இன்றும் உரிய கௌரவத்துடன் இடதுசாரி அரசியலில் நீந்தும் மீன்களாக சில அரசியல் கட்சிகள் உள்ளன. அவற்றை கரைக்கு வருமாறு வாசுதேவா அழைக்கின்றார். தண்ணீருக்குள் இருக்கும் மீன்கள் கருவாடாக விரும்பமாட்டா? தற்போது நடைபெறுகின்ற யுத்தத்திலும் தோழர் வாசு மாறுபட்ட கருத்தையே கொண்டிருக்கிறார். யுத்தம் நடைபெற வேண்டும் என்பதே அவரின் நிலைப்பாடு.

இந்த நாட்டில் உண்மையான இடதுசாரி ஐக்கிய ம் கட்டியெழுப்பப்பட வேண்டுமானால், முதலில் தமிழ் மக்களின், சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். தற்போது நடைபெறுகின்ற யுத்தம் நிறுத்தப்பட்டு இயல்பு நிலை தோன்றக்கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும். இவற்றைக் கவனத்தில் எடுக்காத இடதுசாரி ஐக்கியமானது தேர்தலில் ஆசனத்தை கைப்பற்றுவதற்கான முயற்சி என்றே கூறவேண்டும்.

# என்ன தேசமோ?.... இது என்ன நீதியோ?





வாய்க்குருசியான பட்சணங்களுடன் நிதி அமைச்சரும்....

வயிற்றுப் பசிக்கான உணவிற்காக போரிடும் ஏழைகளும்....

# நாம் தமிழர்... நமது மொழி TAMIL...

அமைச்சர் சி.வி,குணரத்தினவின் இறுதிக் கிரியைகளின் போது இறுதி அஞ்சலி உரையை பெரும்பான்மை இனத்தை சார்ந்தவர்கள், சிங்கள மொழியிலேயே ஆற்றினர். முஸ்லீம் மதகுரு ஒருவர் தமிழ் மொழியில் கவிதை நயத்துடன் ஆற்றினார். இந்து சமயத்தின் சார்பில் வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிசனைச் சார்ந்த மதகுரு விளங்காத மொழியிலே சில சுலோகங்களை கூறிவிட்டு ஆங்கிலத்தில் தனது அஞ்சலி உரையை ஆற்றி விட்டு சென்றார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில், பாராளுமன்ற உறுப்பினர் யோகராஜன், அமைச்சரின் இறுதி அஞ்சலி உரையை ஆங்கிலத்தில் நிகழ்த்தினார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் லட்சக் கணக்கான மலையக மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகிறது. மலையக மக்களில் பெரும்பான்மையோருக்கு ஆங்கிலம் தெரியாது. இங்ஙனம் ஆங்கிலத்தில் பேசும் போது அதை பார்த்துக் கொண்டிருந்த மலையக மக்கள் தமது மனதில் என்ன எண்ணியிருப்பார்களோ தெரியவில்லை.

சில சமயங்களில், இங்கனம் ஆங்கிலத்தில் உரையாற்றும்போது, அது சர்வதேசசமூகத்திற்கு போய்ச் சேரும் என்று கூறுவோரும் உளர். அப்படிப் பார்த்தாலும் பாராளுமன்ற உறுப்பினர் யோகராஜன் ஆற்றிய உரையில், பெரிதாக எந்த விபரமும் இடம் பெறவில்லை. அமைச்சர் சி.வி. குணரத்தினா நல்லவர், கல்வியறிவு உடையவர், என்ற ரீதியிலேயே யோகராஜன் உரை அமைந்திருந்தது.

இன்று இலங்கை வாழ் தமிழ் மக்கள் எல்லோரும் தமிழ் மொழி பேசுவதாலேயே அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர். தமிழ் மக்கள் தமது மொழிக்காக செய்திருக்கும் தியாகங்கள் வார்த்தைகளால் அளவிடமுடியாது. நாடே பற்றி எரிந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், பாராளுமன்ற உறுப்பினர், யோகராஜன் ஏன் ஆங்கிலத்தில் பேசினார் என்பதை விளங்கிக் கொள்ள முடியாது தமிழ் மக்கள் மண்டையை பிய்க்கின்றனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர்கள், மலையக மக்களின் பிரதிநிதியாக இருந்த போதிலும், அவர்களின் செயற்பாடு கனவான்கள் போலவே உள்ளன. கொழும்பில் அவர்களின் செயற்பாடுகள் விசித்திரமாகவே உள்ளன. இந்த தலைவர்களின் பிறந்ததினக் கொண்டாட்டங்கள் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலேயே நடைபெறுகின்றன. இவர்களின் அரசியல் கலந்துரையாடல்கள் கூட சில சமயங்களில் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலேயே நடைபெறுகின்றன.

பாராளுமன்ற சுகபோகம் மிகக் கொடுமையானது. இந்த சுகபோகத்தை சாதாரண மக்களால் அடைய முடியாது. அநேகமாக பெரும் தனவந்த புள்ளிகளாலேயே இதனை அடைய முடியும். சாதாரண மக்களின் பிரச்சினைகளை காரணமாக வைத்துக் கொண்டு இந்த மேட்டுக்குடியினர் ஏதோ வழியில் பாராளுமன்றம் சென்றுவிடுகின்றனர். அங்கே சென்ற பின்பு தமது நிறத்தைக் காட்டுகின்றனர். பாராளுமன்ற உறுப்பினர் யோகராஜனும் தனது சுபாவத்தை இறுதி அஞ்சலியில் காட்டியுள்ளார். இலங்கையில் இடதுசாரிகள் என்றாலும்சரி தொழிற் சங்கவாதிகள் என்றாலும் சரி சாதாரண மக்களை தமது பயணத்துக்கான படிக்கல்லாகவே பாவிக்கின்றனர். வாழ்க பாராளுமன்ற ஜனநாயகம் !!!

# இராணுவ பாதுகாப்புடன் கிரிக்கற்....

இலங்கை கிரிக்கற் கட்டுப்பாட்டு சபைக்கான தேர்தல், மிகக் கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் நடைபெற்றுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி இலங்கையில் நின்றால் எப்படி பாதுகாப்பு கெடுபிடிகள் இருக்குமோ, அதைவிட மோசமானதாக கிரிக்கற் கட்டுப்பாட்டுச் சபை தேர்தலின் போது பாதுகாப்பு கட்டுப்பாடு இருந்தது.

விளையாட்டு என்பது வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதிக்க வேண்டும் என்ற விழுமியத்தை அடிப்படையாகக் கொண்டது. பாடசாலைகள் தோறும் இதுவே அறிவுறுத்தப்படுகிறது. ஆனால் விளையாட்டுத்துறைக்கு பொறுப்பாக இருப்பவர்களை கட்டுப்படுத்த பெருமளவு நிதி பாதுகாப்புக்காக செலவிட வேண்டியநிலையில் நாடு இருக்கிறது. இலங்கையில் பாராளுமன்ற தேர்தலுக்கு கூட இவ்வளவு முக்கியத்துவம் கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே. தேர்தல் 11ம் தேதி நடைபெற்றாலும், அதற்கு வெகு நாட்களுக்கு முன்பே தேர்தல் சம்பந்தமான வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்று வந்தன.

இன்று கிரிக்கற் விளையாட்டு வீரர்கள் லஞ்சம் பெற்று விளையாடியதாக பல குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன. பல வீரர்கள், தாம் லஞ்சம் வாங்கியதை ஒப்புக் கொண்டும் உள்ளனர். தென்னாபிரிக்கா, பாகிஸ்தானிய, இந்திய அணியினர், லஞ்ச குற்றச் சாட்டுகளால் திசை தெரியாது நிறகின்றன. இலங்கையில் கிரிக்கற் விளையாட்டு வீரர்களுக்கு எதிராக எத்தகைய குற்றச்சாட்டும், இதுவரை இடம்பெறவில்லை. மாறாக கிரிக்கற் கட்டுப்பாட்டு சபை இலங்கையில் பிரச்சினைக்கு உள்ளாகியுள்ளது.

இலங்கை கிரிக்கற் கட்டுப்பாட்டுச்சபைக்குள் அரசியல் செல்வாக்கு இருப்பதாலேயே பிரச்சினைகள் தோன்றுவதாக கூறப்படுகிறது. ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமில்லாமல் இந்த நாட்டில் எவருமே கிரிக்கற் விளையாட்டினை ரசிப்பதில் மூழ்கியிருந்து வந்தனர். குறிப்பாக ஏழை எளிய மக்களை திசை திருப்பும் கருவியாகவும் இது விளங்கியது என்று சொல்லலாம். எனவே இன்று கிரிக்கற் விளையாட்டு தள்ளப்பட்டுள்ள சூழ்நிலை அதற்கிருந்த திசை திருப்பும் ஈர்ப்புத்தன்மையை குறைத்திருக்கும் என நம்பலாம்.

படிப்பகம்